JL
031m211, N04
N43.40.6
159526

## ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றை பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என் விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும் பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தக முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்க பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்த மாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும் இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜ

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

### I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | *யாப்பணியிலக்கணங்கள் ... ... | | | |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 4 | 0 | 0 |
| 7. | *தோத்திரத்திரட்டு ... ... | | | |
| 8. | *தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம். | 6 | 0 | 0 |
| | *ஷை இரண்டாம்பாகம் ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் ... ... | 5 | 0 | 0 |
| 9. | *அபிதானசிந்தாமணி ... | | | |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... | 0 | 6 | 0 |
| 12. | *அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... | | | |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... | 0 | 6 | 0 |
| 14. | *தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | | | |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ... | 1 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-சஂ.] சுபானு-ஷு சித்திரை மீ [பகுதி-சு.

Vol. 40. April-May 1943. No. 6.

## மதுரைக்காஞ்சி *

பழமையான சங்கப்பாடல்களிலே மதுரைக்காஞ்சி என்பது ஒன்று. இது பல சிறப்புக்கள் உடையது. முதலாவது—சங்க இலக்கியங்களில் இதுவே அளவில் மிகப்பெரியதாம். சொல்வளங்களாலும் இஃது எதற்கும் குறைந்ததில்லை. 'சொல்லென்னும் பூம்போது தோற்றிப் பொருளென்னும்-நல்லிருந் தீந்தாது நாறும்' ஒரு மல்லிகைமாலை இப்பாட்டு என்று புகழ்ந்தனர் முன்னோர். இதனால் 'கூடற்றமிழ்' என்றும் இது பேர்பெறலாயிற்று.

இரண்டாவது—சிறப்பாகப் பாட்டுடைத்தலைவனைச் சொல்லத் தகும். இவன் நெடுஞ்செழியன் என்ற பாண்டியன்; தமிழரசர்கள் எல்லாரும் கூடி விளைத்த தலையாலங்கானத்துப்போரை அதிபாலியத்திலேயே வென்ற பெருவீரன்; தமிழறிவும் தமிழ்ப் புலவரிடம் அபிமானமும் மிக்கவன்; நக்கீரனாரால் நெடுநல்வாடை என்ற அரிய பாட்டாலும் புகழப்பட்டவன். இவனைப்போல விளங்கிய வீரவேந்தர் அக்காலத்தில் மிகச்சிலரே எனலாம்.

மூன்றாவது—பாடியவரால் பெற்ற சிறப்பு. இப்பாட்டியற்றியவர் மாங்குடிமருதனார் என்பவர்; நல்லிசைப்புலமையாலும் ஞானசீலங்களாலும் தம் காலத்தில் இணையற்று விளங்கியவர். நெடுஞ்செழியன், ஒருகால் வீரவஞ்சினம் ஒன்று கூறநேர்ந்தபோது,

* 14-8-42-ல் திருச்சி ரேடியோவில் ஒலிபரப்பப்பெற்ற இக்கட்டுரை, அநுமதியுடன் பிரசுரிக்கப்படுகின்றது.

'ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை'

என்று, அவனே இவரை எல்லாரினும் மிக உயர்த்திக்கூறியிருப்பது அறியத்தகும்.

நாலாவது சிறப்பாக, இப்பாட்டு எடுத்துமொழியும் அரிய பெரிய பொருளைக் கூறவேண்டும். அஃதாவது—வீடுபேறுநிமித்தமாக அரசனுக்குப் பலவகை நிலையாமைகளை உபதேசிப்பதாம். காஞ்சி என்பது உலகம் நிலையற்றதென்பதைக்கூறும் ஒரு தமிழ்த்திணை. இத்திணைப்பொருளை மதுரையோடு இணைத்து நெடுஞ்செழியனுக்குப் புலவர்கூறியதால் மதுரைக்காஞ்சி எனப்பட்டது. மோக்ஷசாதனங்களைத் தேடிக்கொள்ளும்படி பேரரசனும் பெருவீரனுமான ஒருவனுக்கு இந் நீண்ட பாடலைப் புலவர் கூறினர்; எனவே அவனது வாழ்க்கைமுறையில் இருந்த பெருத்த குறைகளை அவர் கருதியிருத்தல்வேண்டும். அக்குறைகளாவன.—நெடுஞ்செழியன் அயல்நாடுகளில் நாளும் விளைத்துவரும் போர்ச்செயல்களும், அச்செய்கைகளின் பயனாகப் பகைப்புலங்கள்படும் பெருந்துன்பங்களும், நாடுபிடித்த வெற்றிமகிழ்ச்சியிலும் சிற்றின்பம் மதுபானம் முதலிய மற்றக் களிப்புக்களிலும் அவன் மூழ்கிப் பரமார்த்ததத்துவங்களை உணரச் சிறிதும் முயலாதிருந்ததும் ஆகிய இவைகளே எனலாம். ஆனால், இவற்றை இகழ்வாகக்கொண்டு அரசனுக்கு முன்னின்று அச்சமின்றி எடுத்துரைப்பார் யாவர்? இக்குறைகளிற் பல, புகழ்ச்சிக்குரிய துறைகளாகப் புலவர்களாற் பாடப்பட்டுவருங்காலமன்றோ அது; எனினும், அரசனது இத்தகைய மறச்செயல்களை மாற்றி அறச்செயல்களில் அவனைப் புகும்படி செய்விப்பது தம் கடமை என்ற உறுதி ஒருநாள் புலவர்க்கு உண்டாயிற்று.

அன்று, திருமாலுக்குரிய திருவோணப் பெருவிழாவின் கடைசி (ஏழா)நாளாயிருந்தது. அத்திருவிழாவிற்பகல்முதல் மறுநாள்வரை, மதுரைமாநகரில் இருந்த கோலாகலமும் ஆரவாரமும் சொல்லிமுடியாதனவாகும். அக்காட்சிகளையெல்லாம் நேரிற்கண்டவர் இப்புலவர். இவ்விழாவின் மறுநாள், அரசன்கோயிலிற்

காலைமுரசம் முழங்கியது. அரசன் நாளோலக்கமிருந்து யாவர்க்கும் காட்சியளிக்கும் காலமும் வந்தது. ஓலக்கமண்டபத்தைநாடி அரசனால் அழைக்கப்பட்ட படைத்தலைவர்களும், வீரர்களும், பாணரும், விறலியரும், புலவர்களும், இரவலரும் திரண்டு சென்றனர். அலங்காரமான அவ் அத்தாணிமண்டபத்திலே சீரிய சிங்காசனத்தில் வீரவேந்தன் வீற்றிருக்கின்றான். அவன் நாட்டம், முதலில், தன் வெற்றிப்புகழ்க்குக் காரணமான வீரசூரர்களிடமே சென்றது. அவர்களுக்கு அவன் புரிந்த ஆதரவும் கொடையும் அளவற்றவை என்று சொல்லவேண்டியதில்லை. கடைசியில் பாணர் விறலியர் இவர்க்குப்பின் புலவர்கள்.—இவர்களை அரசன் அபிமானித்துப் பரிசில்களும் உதவினான். இப்புலவர்களின் இறுதியில் நம் மாங்குடிமருதனார் அரசன் திருமுன் வந்துநின்றுகொண்டு, அவன் எதிர்பாராதவிதமாய், இக்காஞ்சிப்பாட்டைக் கம்பீரமான குரலில் பாடலானார். இப்பாடலில் அவர் கூறும் பொருளைச் சுருங்கச் சொல்லுகின்றேன்.

'ஓங்குதிசை' என்று மங்கலமாக இப்பாட்டைத்தொடங்கி, நெடுஞ்செழியன் முன்னோரின் ஆட்சிப்பெருமையை, அவர்,

'மலைகாறிய வியன்ஞாலத்து
மழைதொழி லுதவ மாதிரங் கொழுக்கத்
தொடுப்பி னாயிரம் வித்தியது விளைய
நிலனும் மரனும் பயனெதிர்பு நந்த
நோயிகந்து நோக்குவிளங்க
உலக மாண்ட உயர்ந்தோர் மருக'

என்ற அடிகளில் முதலிற் குறிப்பிடுகின்றார். உன் முன்னோர் காலத்தில் தருமநெறி தப்பாமல் அவர்கள் ஒழுகினமையால், மழை தொழில் உதவியது. திசைகளெல்லாம் தழைத்தன. ஒரு விதைப்பில் வித்திய விதை ஆயிரமாக விளைந்தது. வயல்களும் மரங்களும் பயன்பெருக்கின. மக்களெல்லாம் பசியும் பிணியும் நீங்கினர் என்பது பொருள். இக்கருத்தையே,—

'இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு'

என்று திருவள்ளுவரும் வெளியிட்டார். நெறிதவறிய கொடுங்கோல்வேந்தனது நாடு மழைவளமற்று வறுமைமிகும் என்பதை 'அறனில் வேந்த னாளும் வறனுறு குன்றம்' என்பர் முன்னோர்.

இந் நெடுஞ்செழியன் செங்கோல்வேந்தனே. ஆயினும், தன் பகைவரிடமும் அவர்குடிகளிடமும் இவன் சிறிதும் இரக்கம் காட்டியவனல்லன். பகைப்புலங்களைக் கைப்பற்றுவதற்காகக் குடிமக்கள் அலறும்படி அவற்றை எரியிட்டுப் பாழ்படுத்தியும் கொள்ளைகொண்டும் இவன்புரிந்த வன்கண்மைகள் பல.

'உன் பெரும்படை சென்ற இடங்களிலே விளைவுமிக்க மருத வைப்பெல்லாம் நெருப்பு மேய்ந்து உண்டது. காவற்சோலைகள் கவினழிந்தன. நாடென்று பேர்பெற்ற பிரதேசம் காடென்னும் பேர் பெற்றது. பசுத்திரள் தங்கிய இடங்கள் புலிகள் தங்கும் இடமாயின. ஊரிருந்த வழிகள் பாழடைந்தன. பெண்கள் மாளிகை வாயில்களில் இருந்துகொண்டு புலம்பலாயினர். அம் மாளிகைகளில் தீப்பட்டுக் கரிந்த தானியக்குதிர்களிலே கோட்டான்கள் பேட்டுடன் இருந்து கத்தின. விளைவயல்களிலே காட்டுப்பன்றிகள் ஓடித்திரிந்தன. இவ்வாறு அழிந்தன உன் பகைவர் நாடுகள்' என்பர் இம்மருதனார்.

இந்நிலைமைகளைப் புகழ்ச்சித்துறைகளாக்கி அரசர்களைப் புலவர்கள் மிகுதியாகப் பாடுங்காலம் அது. ஆனால், நெடுஞ்செழியனுக்கு உறுதிப்பொருளைக் கூறப்புகும் இப்புலவர், இவ்வாறு கூறியது, அவனது கொடுமைகளைக் குறிப்பிடுவதற்கென்றே கொள்ளலாம். தற்கால உலக மகாயுத்தத்தில், அச்சுநாடுகள் பகைப்புலங்களிற் புரியும் அட்டூழியங்கள் பல, மேற்கூறிய அடிகளிலே பிரதிபலித்தல் காணலாம்.

இப்படிப் பகைவரிடம் கொடுமைகாட்டினும், பொய்யற்ற நட்பு, வள்ளன்மை, புகழ்ச்சிவிருப்பு முதலிய நல்லியல்புகள் வாய்ந்தவன் நம் அரசன் என்பதை—அவனை வாழ்த்தியவண்ணமே, இவர்,

'உயர்நிலை யுலகம் அமிழ்தொடு பெறினும்
பொய்சே ணீங்கிய வாய்நட் பினையே
பகைவர்க் கஞ்சிப் பணிந்தொழு கலையே
பழிநமக் கெழுக வென்னாய் விழுநிதி
யீத லுள்ளமொடு இசைவேட் குவையே'

என்ற அடிகளிற் குறிப்பிட்டு, அவனைத் தம்வசமாக்க முயலுகின்றார்.

இவ்வாறு புகழ்ந்தவர், பின் அவன் நாடு நகர்களை வருணிக்கத் தொடங்கி, மலை காடு முதலிய நிலங்களின் இயல்புகளையும்,

அந்நிலத்து மக்களின் வாழ்க்கை, நடையுடை பாவனைகளையும் மிக அழகாகப் பாடுகின்றார். இந் நிலங்களின்மத்தியிலே மதுரைமா நகரமானது மற்றோர் இந்திரபுரிபோல் விளங்குகின்றது. நெடுஞ் செழியன் அடைந்த வெற்றிப்பயனை பெருஞ்செல்வங்களெல் லாம் ஒருங்கே திரண்டு குவியும் இடமன்றோ அது; அதனால்—

'நிலனெடுக் கல்லா ஒண்பல் வெறுக்கைப்
பயனற வறியா வளங்கெழு திருநகர்'

என்று புகழப்படுகின்றது. இத்தலைநகரமானது,

'மண்ணுற ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கின்
விண்ணுற ஓங்கிய பலபடைப் புரிசை
வையை யன்ன வழக்குடை வாயில்
யாறுகிடந் தன்ன அகனெடுந் தெருவின்
ஓவுக்கண் டன்ன இருபெரு நியமம்'

முதலியவற்றுடன் விளங்குவதாம். திருப்பரங்குன்றத்தின் விழா வொலியும் ஆங்குக் கேட்கப்படுகின்றது. வைகைப்பிரவாகம்போல் மக்கட்கூட்டம் வழங்கும் வாயிலுள்ளது அந்நகரம் என்றும், ஆறு இடையே கிடந்தாற்போல் விளங்குவன, அதன் அகன்ற வீதிகள் என்றும், அவ்வீதிகளில் நாளங்காடி, அல்லங்காடி என்ற இரண்டு கடைத்தெருக்கள் அலங்கார சித்திரங்கள்போல அமைந்துள்ளன என்றும் கூறும் அழகு இன்பமூட்டுகின்றது. இவற்றுள் நாளங் காடியில் விற்பனைப் பண்டங்களை இன்னின்ன என்று அறிவிக்கும் கொடிவகைகளும், அவ்விழாக்காலத்திற் கடைவீதிகளிலே மக்கள் திரண்டுள்ளதும், நாற்பெரும் படைவீரர்கள் அவ்வீதிகளிற் செல் லும்போது; பண்டம்விற்கும் பெண்டிரும் பிறரும் அஞ்சி ஒதுங்கி அவர்கள் அகன்றதும் வெளிப்பட்டு விற்பதற்குத் திரியும் நிலையும் நேரிற் காண்பதுபோலக் கூறப்பட்டுள்ளன. இப் பெரிய வியாபார ஸ்தலத்தின் பெருமையை—

'மழைகொளக் குறையாது புனல்புக மிகாது
கரைபொரு திரங்கும் முந்நீர் போலக்
கொளக்கொளக் குறையாது தரத்தர மிகாது
மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்
நாளங்காடி'

என்று இப்புலவர் சிறப்பிப்பர். மேகங்கள் முகப்பதால் குறைவு படாமலும், ஆறுகள் வந்து பாய்வதால் மிகாமலும் ஒருநிலையிலுள்ள

கடல்போல், கொள்ளக்கொள்ளக் குறையாமலும், கொண்டுவந்து குவிக்கக்குவிக்க மிகாமலும் நிலைபெற்றுள்ளன அக்கடைத்தெருக் கள் என்பது பொருள்.

இனி, அல்லங்காடி என்ற அந்திக்கடையின் காட்சி இதன் மேலும் அழகுவாய்ந்ததாம். திருவிழாவின் ஏழாநாள் தத்தம் தெய்வங்களை வழிபடுவதற்காக நகரச்செல்வர்களும், அவர் மக ளிரும் இரதங்களில் அலங்காரமாகக் கோயில்கட்குச் செல்வதை யும் அப்போது மகளிர் அழகிய தங்கள் சிறுகுழந்தைகளை,

'தாதணி தாமரைப் போது பிடித்தாங்கு'

கையிலேந்திச்செல்வதையும் புலவர் கூறும் அழகு இன்பம் ஊட்டுவதாகும். மலர்ந்த தாமரைப்பூவைச் சிறுகுழவிக்கு ஏற்ற உவமையாக்கியிருப்பது புதுமைதருகின்றது. இவ் அந்திக்கடை யில் ஆடைகள் விற்கும் வியாபாரிகள், தாம் நெய்த துணிகளை விரித்தபடியே விலைகூறிக்கொண்டு நெருங்கிநிற்கும் நிலைமையை,

'குறியவும் நெடியவும் மடிதரூஉ விரித்துச்
சிறியரும் பெரியரும் கம்மியர் குழீஇ
நால்வேறு தெருவினும் காலுற நிற்றர'

என்று இவர் கூறுவது, மதுரை 'அந்திக்கடைப்பொட்டல்' என்ற வியாபாரஸ்தலம், இன்றுள்ளபடியே, சங்கநாளிலும் விளங்கிய தென்பதைக் காட்டுகிறது.

இவ்வாறே, இரண்டு பெரிய கடைவீதிகளிலும் அறவோர் அந்தணர் முதலியோர் இடங்களிலும் தாம் கண்ட அதிசயக்காட்சிக ளாகப் புலவர் கூறியிருப்பவை, மகிழ்ச்சிதருகின்றன. அந்திக்குப் பின், இரவு முதலிரண்டு சாமங்களிலே வெறியாட்டுக்களும், குரவைக்கூத்துக்களும், பாட்டு உரை ஆட்டங்களும் பாத் தையரின் கோலாகலமும் அத்திருவிழாநாளில் மலிந்திருந்தன. மூன்றும் சாமந்தான் ஊர்முழுதும் களைத்து ஓய்ந்து அடங்குவ தாயிற்று. இந் நடுநிசியும் ஒரு கூட்டத்தாரின் கொண்டாட்டத் துக்கு உரியதாயிருந்தது. அவர் யாவர்? கள்வரென்று சொல்லவும் வேண்டுமோ? இவர்களை,

'இரும்பிடி மேந்தோ லன்ன இருள்சேர்பு
கல்லும் மரனும் துணிக்கும் கூர்மைத்
தொடலை வாளர் தொடுதோ லடியர்

நிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர்
மென்னூ லேணிப் பன்மாண் சுற்றினர்
நிலனகழ் உளியர் கலன்நசைஇக் கொட்கும்
கண்மா றாடவர்'

என்று வருணிக்கின்றார் புலவர். அதாவது கரிய பிடியின்தோல் போன்ற சட்டையிட்டவர். கூர்மையான தொங்குவாளுடைய வர். செருப்பிட்ட அடியினர். சொட்டை என்ற வளைவுக்கத்தி செருகிய இடையுள்ளவர். நீலநிறமான அரைக்கச்சுடையவர். நூலேணியை அரையிற் சுற்றியவர். அணிகலன் முதலிய சொத்துள்ள இடங்களை அறியத்திரிபவர். இமைக்கும் அளவில் மறைய வல்லவர் இக்கள்வர், என்பதாம்.

இக்கள்வரின் மறைவிடங்களைத் துருவி ஆராயும் ஊர்காவல ரின் சிறப்பை,

'வயக்களிறு பார்க்கும் வயப்புலி போலத்
துஞ்சாக் கண்ணர் அஞ்சாக் கொள்கையர்
ஊர்காப் பாளர் ஊக்கருங் கணையினர்
தேர்வழங்கு தெருவில் நீர் திரண்டொழுகு
மழையமைந் துற்ற அரைநா ளமையமும்
அசைவிலர் எழுந்து நயம்வந்து வழங்கலின்
அச்ச மறியாது ஏமமாகிய மற்றை யாமம்'

என்று கூறுவதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வடிகளில் களிறுகளைத் தேடித்திரியும் புலிபோலத் துஞ்சாக்கண்ணராயும் அஞ்சாத உறுதியராயும் அம்பினராயும் உள்ளவர்கள் ஊர்காவலர் என்றும், திருவோணவிழா நடக்கும் ஆவணிமாதத்தில், மழைபொழியும் நடுநிசியிலும் இவரது காவல் குறைவற்றிருந்ததென்றும், அதனால், அச்செல்வம் மிக்க நகர் அச்சமறியாமல் இருந்ததென்றும் கூறும் அழகு, தற்கால ஊர் காப்புச்சங்கத்தார்க்கும் அவராற் காக்கப்படும் ஊரார்க்கும் உற்சாகமூட்டுவதன்றோ?

அதன்பின்பு, நான்காம்சாமமாகிய வைகறைக்காலம் தோன் றியது. அக்காலத்தில், நகர ஆரவாரம் பெருகலாயிற்று. இவ் வைகறையில் இன்றுயிலெழுந்து காலைக்கடன்களையெல்லாம் நிறை வேற்றியபின், நெடுஞ்செழியன் தன் அத்தாணிமண்டபம் சென்றான்.

சென்றதும், அவனது நாளோலக்கத்திற்குச் சென்ற பெருமக்களிலே, நம் புலவரும் ஒருவரென்பது மேலே கூறினேன்.

இவ்வாறு, முதனாட்பகல்முதல் மறுநாட்காலைவரை, தாம் கண்ட அழகிய மதுரைக் காட்சிகளையெல்லாம் அரசன்முன்னின்று அவனும் அவையோரும் அதிசயமடையும்படி பாடினார் மாங்குடிமருதனார். இம்மட்டோடு அவர் நின்றவராயின் அவரைப் பரிசில் விரும்பிப் பாடும் எளிய புலவருள் ஒருவராகவே நாம் கருதிவிடலாம். அவ்வாறு கருதத்தகுமோ? ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வியும், உலகமொடு நிலைஇய பலர்புகழ்சிறப்பும் நம் புலவர்க்கு இருந்தன என்று நெடுஞ்செழியனே வாயாரப்புகழ்வதால், ஞானசீலங்களும் உலகை நல்வழிப்படுத்தவல்ல ஆற்றலும் உடைய பெரியார் இவர் என்பதில் ஐயமில்லை. அதனாற்றான், அவ் வீரவேந்தன்முன் அஞ்சாதுநின்றுகொண்டு — 'அரசே! வாழி! பிறவியறுதற்குரிய நெறிகளில் முயலாமல் பயனின்றிக்கழிந்த பெருவேந்தர்கள், முன்பும் திரையிடுமணலினும் பலர் என்பதை அறிவாய். அதனால், நீயும் அவ்வாறு வீணேகழியலாகாது என்று, இம்மையிற் பெரியதாயிருப்பதொருபொருளை இங்கு உனக்குக் கூற வந்தேன். அது, கந்தழி என்ற தத்துவங்கடந்த பொருளாம். அதனை என்னாற் காட்டுதல் அரிது. நீ இனிக் காலத்தைக் கழியாமல் ஞானாசிரியரை அடைந்து அப்பரமார்த்த தத்துவங்களைக் கேட்டு உய்வாயாக. இதுவரை நான் சிறப்பித்துக்கூறிய உன் மதுரைப்பெருஞ்செல்வங்களை நினைத்துப்பார். உனக்கு அவற்றோடு என்ன உறவுண்டு? உன்னிடம் இதுவரை தங்கிய மாயை இனிக்கெடுவதாக. நீ நீடுவாழி' என்று அரசனுக்கு உலகநிலையாமைகளைப் பலபடியாக வற்புறுத்தி உபதேசிக்கலானார். இதுகேட்ட அவையோரும் பிறரும் வியப்பும் உவப்பும் அடைந்ததோடு, தத்துவமும் அதுவே என்று உணர்ந்தனர். இத்தகைய பரமோபதேசம் சூரனும் பண்டிதனுமான நெடுஞ்செழியனை நல்வழியிற் செலுத்தியிருக்கும் என்பதில் ஐயமுண்டோ? சீரிய பொருளுரைகளும் அறவுரைகளும் நிரம்பிய இக்காஞ்சிப்பாட்டு, நம் காலத்தார்க்கும் பெருநன்மைபயந்து வாழ்விப்பதாக.

---

மு. இராகவையங்கார்,
இராமநாதபுரம்.

# கம்பராமாயணசாரம்

## உத்தரகாண்டம்

[ராவ்ஸாஹிப். ஸ்ரீ. வே. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள் G.B.V.C.]

[கஙூஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

### ரு-வது இலங்கையழித்தபடலம்.

தம் தம்பி மாலியும் சேனையும் திருமாலினால் அழிய, மாலியவானும் சுமாலியும் தப்பிப்பிழைத்த இராக்கதரோடு இலங்கையை விட்டுப் பாதாளலோகத்துள்ளே புகுந்து ஒளித்திவாழ்ந்ததைக் கூறுவது.

அரக்கர் அமராவதிநகரை அழித்தற்குச் செல்லுதல்

தேவர்கள், அரக்கரால் அடைந்த துன்பத்தைச் சிவனிடம் சென்று தெரிவித்ததையும், 'அரக்கர் தம்மை அடைந்தோராதலால் அவர்களை நாம்வெல்வது தகாது, திருமாலிடம் சென்று செப்புங்கள்' என்று சிவன் கூறியதையும், அவ்வாறே அவர்கள் திருமாலை அடைந்து தெரிவித்ததையும் தூதர் மாலியவானிடம் சொன்னார்கள். அவன், அதைத் தம்பியர்க்குச்சொல்லி, 'நம்மையெல்லாம் அழிக்க எண்ணிய தேவர்களை அதஞ்செய்து அவர்களுடைய அமராவதிநகரை அழித்தொழிப்போம்' என்றான். அவன் ஆணைப்படி தேர்ப்படை முதலிய நாற்படைகளும் தேவலோகத்தைநோக்கிப் போர்க்குப் புறப்பட்டன. கால்களில் வீரக்கழலும் மார்பில் கவசமும் நெற்றியிற் பட்டமும் அணிந்து மாலியவானும் சுமாலியும் மாலியும் தேரேறினார்கள். படைகள் வேகமாகச்செல்லும் பாதையில் மண்ணினின்றெழுந்து மேலேபரந்த மண்தூள்விழுந்து எங்கும் மூடியதனால்,பொன்னுலகம் மண்ணுலகமாகத் தோன்றியது.

திருமால் அரக்கரைப் போர்செய்து அழித்தல்

தேவர்களனுப்பிய தூதர், அரக்கர்படையெடுப்பை அறிவித்தபோது, திருமால், கருடன்மீதேறிச்சென்று அந்தப் படையைத் தாக்கினான். பேருருவமும் பொன்னிறமுமுடைய கருடன்மீது பொன்னபரணங்கள்பூண்டு பொன்னுடைபுனைந்து சார்ங்கமென்னும் வில்லேந்தி நீலவண்ணனான நெடுமால் நின்ற காட்சி, மேருமலைமீது மின்னல்வீசி இந்திரவில்லோடுவிளங்கும் கார்மேகத்தோற்றம் போன்றது. கருடனுடைய சிறகுகளின் வேகமான காற்றினால் தேர்கள் சிதைந்தன; யானைகள் உலைந்தன; குதிரைகள் உருண்டன;

படைவீரர் குலைந்துவிழுந்தார்கள். சேனைத்தலைவர்கள் திருமாலின் மேனி தெரியாமல் மறையும்படி கணைகள் எய்தார்கள். தண்டு உலக்கை வேல் சூலம் முதலிய ஆயுதங்களை விட்டார்கள். அவைக ளெல்லாம் பொடிபடும்படியாகவும் அரக்கர்படை மூட்டப்படும்படி யாகவும் திருமால் அம்புமழைபொழிந்து இராக்கதசேனையைச் சின்னபின்னமாக்கினன்.

## சுமாலி போர்செய்தல்

அப்போது சுமாலி, வாய்மடித்து விற்பிடித்து நாணெறிந்து *குணத்தொனிசெய்து அதட்டிக் கடுஞ்சொற்கள்கூறித் 'திருமாலைக் கொன்று அவனிரத்தத்தைக் குடிப்பேன்' என்றுகூறித் தன் தேரை முடுக்கிக்கொண்டுவந்து திருமாலை எதிர்வானுகி, அம்புமாரி பொழிந்தான். திருமால் அந்த அம்புகளைத் தன் அம்புகளால் விலக்கிப் பாகனையும் குதிரைகளையும் கொன்று தேரைத் தூளாகும் படிசெய்தான். அரக்கர்படை ஓட்டெடுக்கத் தேரழிந்த சுமாலி செய்வதின்னதென்றுதெரியாது திகைத்துநின்முன்.

## மாலிவதை

அப்போது தன் தமையனது நிலைமையைக் கண்ட மாலி, மலைமீது சிங்கமுற்முற்போலத் தேரேறிவந்து அவனைப் போர் புரியாமல் விலக்ச்செய்துவிட்டுத் திருமாலை எதிர்த்து மண்ணும் விண்ணும் மறையும்படி சோனைமாரிபோல்ச் சரமாரிபொழிந்தான். திருமால் அவனம்புகளனைத்தையும் தன் அம்புகளால் துண்டங்க ளாக்கி அவன் மார்பூடுருவும்படியும் தேர்க்குதிரைகளோடு பாகன் நாசமுறும்படியும் அநேக பாணங்களை விடுத்தான். மலைபோன்ற மார்பினின்று ஆறுபோல இரத்தமோட மயங்கிச் சிறிதுநேரத்துக் குள்ளே தெளிவுற்ற மாலி, தேரினின்று குதித்துச் சிங்கம்போலக் கர்ச்சித்துக் கருடனுடைய நெற்றிமீது மேகத்தினின்று இடிவிழுந் தாற்போலத் தண்டுகொண்டு மோதினன். அதனல் தளர்வுற்ற கருடனது நிலைமையைக் கண்ட திருமால், சக்கராயுதத்தை யேவ, அது துவாதசாதித்தரென்ற பன்னிருசூரியரோடு பதின்மூன்றும் சூரியன் ஒன்று புதிதாகத் தோன்றியதுபோலச் சுடர்விட்டுவிளங்கி விரைந்துசென்று மாலியின் அடிக்கழுத்தையறுத்து முடித்தலை †படித்தலத்து விழும்படிசெய்தது. அமரர் களிப்பினுல் ஆடினர்.

---

* குணம் - வில்லின் நாண். † படி - பூமி.

அரக்கர் பயத்தால் வாடினார்கள். திருமால் அண்டமுண்ட செம்பவளவாயிலே பாஞ்சசன்னியமென்னும் சங்கத்தைவைத்து ஊதி வெற்றிமுழக்கஞ்செய்தான். மாலி கொல்லப்பட்டதனால் அவன் தமையன்மாரிருவரும் சோகமடைந்திருந்தார்கள். அப்போது திருமால் ஏவிய சக்கரத்தாலும் கதையாலும் வாளாலும் அம்புகளாலும் அரக்கப்படை அழிதலுற்றது. வேகமாக அறுத்த சக்கரத்தின்மீது குதித்தெழும் தலைகள், அம்மானையாடும் வீரலக்குமி கையினின்று மேனோக்கியெழும் அம்மானைகள்போன்றன. அறுபட்டு வெண்கொற்றக்குடைமேல்விழுந்த கைகள் சந்திரனைப் பற்றும் இராகுப்பாம்புபோன்றன. தலை கால் கைகள் அறுபட்ட அரக்கருடல்கள் ஐந்து உறுப்புக்களை (கால்கள் நான்கொடு தலையை) உள்ளடக்கிய ஆமைகள்போன்றன. யானைகள் உறுப்புக்கள் அறுப்புண்டுகிடந்த படுகளப்பகுதி, கால்கள் உரல்களாகக் கொம்புகள் உலக்கையாகக் காதுகள் சுளகாக வால்கள் பெருக்குமாறாக நெல்முதலியன குற்றும் குற்றப்புரை போன்றது.

## சுமாலி தோல்வி

இனி நின்றால் நாசமடைவோமென்று பயந்து மாலியவான் விரைந்து ஓடலுற்றான். அவன்சேனை நிலைகுலைந்து ஓடியது. அப்போது சுமாலி, கோபத்தோடு திருமாலெதிரே சென்று நின்று, 'தோல்வியுற்றோடிய படையைக் கொன்றாய்! வீரருள் ஒருவனாகச் சேர்த்து எண்ணப்படுவாயல்லை. தருமத்தைக் கைவிட்டவர்செயலைச் செய்தாய். போர்செய்ய விரும்பாதவர், போரிலே பிரவேசித்தோர் (பின்பு) முதுகிடவாவது கையிலுள்ள ஆயுதங்களை எறிந்துவிடவாவது போர்செய்தலை நிறுத்திவிடவாவது செய்தவர், தூதாக வரவிட்டவர், அலிகள், பெண்கள், நோயாளிகள், "(உன்பகையை விட்டுவிட்டேன்.) உன் நண்பனானேன்" என்று கூறுபவர்கள்: ஆகிய இவர்கள் கொல்லுதற்குரியாரல்லர்'* என்று கூறினான்.

---

* பொரஇட்டமி லாதோரமர் புறகிட்டவர் புகுந்தோர்
காம்விட்டவெம் படையோரமர் கைவிட்டவர் தூதாய்
வரவிட்டவர் அலிமங்கையர் வன்னோயர்நுன் னுறவென்
றுரம்விட்டவர் இவர்வெங்கொலைக் குரியாரலர் உரவோய்.

அமர்பொர இட்டமிலாதோர் என இயைத்துப் பொருள்கொள்க.

அமர் - போர். பொர - போர்செய்ய. புறகிடல் - முதுகிடல் - புறங்காட்டல். புகுந்தோர் - போர்செய்தற்குப் போர்க்களத்திற் பிரவேசித்

திருமால், 'உங்களுக்குத் தோற்றோடி என்னைச் சரணடைந்த தேவர்களுக்கு, அவர்கள் பகைவராகிய நீங்கள் தோற்றோடினாலும் தொடர்ந்து கொல்வதாக வரங்கொடுத்திருக்கிறபடிசெய்தேன்' என்று மறுமொழி கூறினான். சுமாலி, 'உன்னோடு போர்செய்வேன்; நீ பொருதற்கு வருக' என்றுகூறி ஒரு வேலை விட்டான். தன் நெஞ்சிற் பாய்ந்த அந்த வேலை உருவித் திருமால் அவன்மார்பில் எறிந்தான். அந்த வேல் வாழைப்பழத்தூடுசெல்லும் ஊசிபோல் எளிதாக அவன் மார்பூடுருவியோடியது. அதனால் அவன் இறந்தானென்று தேவர்கள் ஆநந்தக்கூத்தாடிக்கொண்டிருக்கும்போது, அவன் உறங்கினவன் விழித்தெழுந்தாற்போலத் தளர்ச்சிநீங்கிக் கிளர்ச்சியுடையவனாய் எழுந்து ஒரு சூலத்தைத் திருமால்மார்பில் எறிந்தான். அது (சுவர்மேல் எறிந்த பந்துபோல) உள்ளே செல்ல மாட்டாமற்போயிற்று. அதுகண்ட சுமாலி, திருமாலின் வயிற்றிலும் முகத்திலும் முட்டி(-விரன்முடக்கிய கை)யாற் சாடி ஒருவில்லளவுதூரத்திலே எதிர்த்துநின்றான். திருமால் விற்கோடியாற் புடைத்து, அவன் கடலிற்போய் விழும்படிசெய்து, அரக்கர் தேர்ப்படை முதலிய நாற்படையும் அழியும்படிசெய்தான்.

### மாலியவான் முதலிய அரக்கர் பாதாளத்தில் ஒளித்துவாழ்தல்

திருமாலின் ஐம்படைகளாலும் கருடன் சிறகுக்காற்றினாலும் பூமியில் வாழ்தல் முடியாதென்று எண்ணி, மாலியவானும் சுமாலியும் தம்மொடு தப்பிப்பிழைத்த அரக்கரை(யும் இலங்கையில் உள்ள அரக்கர்களை)யும் கூட்டிக்கொண்டு பாதாளத்துக்குப்போய் ஒளித்திருந்து வாழ்வாரானார்கள்.

ரு-வது இலங்கையழித்தபடலம் முற்றிற்று.

[தொடரும்]

---

தோர். கரம் (-கை)விட்ட வெம்படையோர், - கொடிய ஆயுதங்களைக் கை(யினின்று எறிந்து) விட்டவர். அலிகள் - நபுஞ்சகர் - ஆணும் பெண்ணும் அல்லாதவர். உறவு - கட்பு (தமிழகராதி). உரம் - வலிமை; ஊக்கம். உரவோய் - வலிமையுடையோனே !

## *நக்கீரரும் கருத்துரிமைப் புலமையறமும்

நாகரிகமக்கள் பயிலும் கலைகளெல்லாம் உயர்ந்தநோக்கும் சிறந்த பயனும் உடையவாகும்: எனினும் அவை பண்பாலும் பயனாலும் பலதிறப்படும். ஓவியம் இசை போல்பவை பொறியுணர்வால் இன்பம்பயப்பவை. கவிகளோ பொறிப்புலன்கள்தரும் சுவையோடமையாமல், அறிவு துணையாகத் தூய கருத்தின்பம் தருபவைகள். ஓவியம் கட்புலனைக் கதுவி அழகுணர்வாற் சுவையூட்டும் கலையாகும். இசைக்கலை செவி துணையாக உளங்குளிர்வித்து இன்பந்தரும் இயல்பிற்று. அவ்வாறே மணமும், ஊறும், உணவும் முறையே மூக்கும் மெய்யும் நாக்கும் துணையாய் மனங்கனிவித்து இனிப்பிக்குந்தன்மையவாம். சான்றோர்செய்யுளோ, இவைபோலன்றிப் பொறித்துணையின்றியும் கருத்தினுறைத்து மனங்கனிவித்து அறிவின்பமளிக்கும் கலையாகும். பொறிப்புலனுதவும் சுவைகள் உணர்வொடுபுணர்ந்து உள்ளங்குளிர்வித்து உவப்பூட்டும்பெற்றியன. அவற்றின் சுவைநுகர்வால் உவகை பெறுவது உளத்தளவேயாகும். ஆனல் ஆய்தொறும் தூய அறிவின்பம் அளிப்பது செய்யுட்செல்வமெனும் கவிக்கலையின் தனிச்சிறப்பாகும்.

இனி, கலைகளாற் பெறுமின்பம் நல்லதும் அல்லதும் என்று இருவகைத்தாம். மனவெழுச்சிதருமுறையிற் சுவையனைத்தும் ஒருமைப்பண்புடையவேனும், அவை அவ்வச் சுவைப்பயனால், அச்சுவைவிளைக்கும் இன்பப்பண்பால், நயனும் கயமையும் நல்குமியல்பால், தூயவும் தீயவும் என இருதிறத்தவாய் வகுக்கப்பெறும். அப்பாகுபாடு அதனதன் பயனோக்கும் பொருட்போக்கும் பற்றியதாம். உளங்களிக்கும் கலைச்சுவைகள்போலவே, கவிதரும் அறிவின்பமும் விழுமமும் (-துன்பமும்) விழுப்பமும் (-மேன்மையும்)

---

* திருச்சி "வானொலி" நிலையத்தில் 14-4-43-ல் பேசியது. அந்நிலையத் தலைவர் உடன்பாட்டுடன் "செந்தமிழில்" வெளியிடப்பெறுவது.

தழுவுவதுண்டு. கேவலம் காமக்களிவளர்த்து மனமாசுபடுத்துங் கவியினம் அறிஞரால் வெறுக்கப்படும்; "தீதொரீஇ நன்றின்பாலுய்க்கும்" செய்யுள்கள் நன்மக்களாற் பொன்னேபோற் போற்றப்படும்.

இன்னும், இயற்பாக்கள், குற்றமற்ற இன்புதவுமியல்பும், இயற்றும் புலவர்நோக்கும் கொண்டு, பலவேறு நலமீயும் பெற்றியவாம். சிலகவிகள் பலநலம் பயக்கும் பரிசுடையவாமேனும், அவற்றுட் சிறந்துமிகும் குறிக்கோளால் அவ்வவற்றை வகுத்தமைத்தல் மரபாகும். இயற்கையெழில்நயப்புணர்த்தல், அறமுரைத்தல், மனங்கனிய மகிழ்வூட்டல், நவையறுசுவையால் அறிவின்பமளித்தல், இகலறு நகைவிளைத்தல், தூயனவாய்ந்து துணியத்தூண்டல், செயற்கரியசெய்வித்தல் போன்ற புலவர்கருத்துவேறுபாடுகளாற் கவிகள் பலவகைப்படும். இவ்வேறுபாட்டுக்கு அடிப்படையாவது, அவ்வக்கவியியற்றும் புலவரின் உளப்பாங்கும் குறிக்கோளுமேயாம். நாகரிகமொழிகளிலுள்ள இலக்கியம் (அதாவது செய்யுட் செல்வம்) எல்லாவற்றிலும் அவ்வப்புலவரின் சிறந்த குறிக்கோளால் அவரவர்கவிகள் தனிப்பெருமைகொள்ளக் காணலாம். நோக்கால் நன்மைகுறிப்பனவெல்லாம் நீக்காது கொள்ளப்பெறும் எனினும், தறுகண் முதலிய பெருமிதவகையோடு உவகை, அவலம், நகை, மருள், அச்சம், தீதறு வெகுளி, பழிப்டா இளிவரல் போன்ற சுவைகளை விளைக்கும் சிறப்பியல்புகளால் ஒவ்வொருபுலவரின் செய்யுட் குறிக்கோள் சிறப்புடையதாகும். பரணிகளால் அறப்போர்மறமும் வெற்றிப்பெருமிதமும், அகத்துறைகளால் தூய காதலுவகையும், அங்கதவகையால் நகையும் இளிவரலும் எழுவது இயல்பு. சயங்கொண்டார்கவிகள் அறமறமும் வென்றிப்பெருமிதமும் விளைக்கும். கபிலர்கவிகள் கடவுட்காதல் கனிவிக்கும். உலோச்சனார்பாட்டு இயற்கையெழில்வளம் கிளக்கும். வள்ளுவர் வெண்பா இறவா அறமும், கம்பர்விருத்தம் மக்கட்சால்பும் மணக்கும்.

அவ்வாறே நக்கீரர்பாட்டின் தனிச்சிறப்பு அஞ்சாநெஞ்சமும் கருதியதுகாவா உள்ளப்பெருமையு மாகும்.

இப் பழம்புலவரின் செய்யுட்சிறப்பை ஆராயுமுன், ஆய்ந்தறிய வேண்டுவதொன்றுளது. அப்பெயருடைய புலவர் தமிழகத்தில் பலர் வாழ்ந்தாரெனத் தெரிகிறது. முற்காலத்தொகைநூற்புலவர் வரிசையில் முதலிடம் பெற்ற நக்கீரர் ஒருவர்; பிற்காலத்தில் திரு முறைத்தொகையில் முருகாற்றுப்படையும் பிற பிரபந்தங்களுமியற்றிய நக்கீரர் வேறு ஒருவர். யாப்புநூலியற்றிய இடைக்கால நக்கீரர் இன்னும் வேறொருவர்; நாடகம் பாடிய நக்கீரர் மற்றொருவரென் பாருமுளர். பண்டைக்காலத்தும், அப்பெயரோடுவரும் செய்யு ளனைத்தும் செய்தவர் ஒரே நக்கீரர் எனக் கருதற்கில்லை. ஆராய்ச்சி யாளர், முருகாற்றுப்படை பாடிய நக்கீரர் வேறு; நெடுநல்வாடை யும் பிற பழம்பாட்டும் இயற்றிய நக்கீரர் வேறுதல்வேண்டுமெனக் கூறுகின்றனர். இந்த ஆராய்ச்சியில் இங்கு நான் இறங்கவில்லை. சிவ பிரான் நுதல்விழிநெருப்பையும் அஞ்சாமல், அவர் கடவுட்கவியி லும் குற்றங்கூறிய நக்கீரர்கவிநோக்கும் கருத்துரிமைத் தனிச் சிறப்பும் மட்டுமே இன்று இங்குப் பேசுமாறு பணிக்கப்பட்டுளேன். அவ்வாலாறே நிகழாத பிற்காலக் கட்டுக்கதையெனக் கருது வாரும் உளர். அதனுண்மை யாதாயினுமாகுக. அவ்வரலாற்றுக்கு மூலமாயிருந்த நக்கீரர் யாராயினுமாகுக. அவர்கால முடியுடைப் பாண்டியனும் அடிதொழ, அவன்மன்றப் பெரும்புலவரனைவரும் மதித்து வணங்கிப் பாராட்டும் கடவுட்புலவரான இறையனார், அவ்வேந்தன்கோமாட்டியின் கூந்தற்சிறப்பை வியந்து நயம்படப் பாடினார்.—"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி, காமஞ் செப்பாது கண்டது மொழிமோ"—என்பது அப்பாட்டு. நலம்புனைந் துரைத்தல் எனும் அவ் அகத்துறைப்பாட்டில் நக்கீரர் அற்றம் நோக்காது குற்றங்கூறினார். அதற்குச் சினந்த இறையனார் அழ லெழ விழித்ததற்கஞ்சாமலும், வெறுத்தவேந்தன் வெகுளியை மதியாமலும், தாம் கூறிய 'குற்றம் குற்றமே' என வற்புறுத்தி வாதிக்க முற்பட்ட நக்கீரரின் துணிவு வியப்பொடு நயக்கத்தக்க பண்பல்லவா? வேந்தன்வெறுப்பையும், மன்றத்தாரவமதிப்பை யும், இறையனார்சினத்தையும் பொருட்படுத்தாமல், தான் மெய்

யெனக்கண்டதைப் பொய்படமறையாமல் உட்காதுரைத்த புலவனின் உண்மையிலூன்றிய உள்ளத்தூரனும், கருதியது காவாதுரைக்கும் கருத்துரிமைப்பெருமையும் பேணிச் சிறந்த அப்புலவர்திறத்தை வியந்து பாராட்டுவது அறிவறமாகும்.

தான் மதிக்கும் தன்காலப்புலவரெலாம் பிழையன்றெனப் புகழும் இறையனார்பாட்டில்; தான் கண்ட தவறுரைக்கத்துணிந்த தமிழ்ப்புலவன் அறிவுரத்தினழகு போற்றற்பாலதன்றோ? இங்ஙனம் அவர்கூறியது, பிறர்புகழ்பெறாத அழுக்காறுபற்றியன்று. மகளிர்குழலில் இயற்கைமணமின்மை உலகறியும் உண்மையன்றோ? அதற்கு மாறாக, மன்னவன்தலைவி கூந்தல்மட்டும் மட்டவிழ்நறுமணம்வாய்ந்துளதென்பது வாய்மையாகாதே? மன்னனை மகிழ்விக்கச்சொன்ன இப்பாட்டிலுள்ள பிழையைக் கரவாதுரைத்து உள்ளத்தாற் பொய்யாதொழுகிய பெருமைவாய்ந்தவர் நக்கீரர் என்பது இக்கதையால்மட்டும் அறியப்படுவதன்று. மதுரைப் பட்டிமண்டபத்தில், 'தமிழ் தீதெனவுரைத்த காரியத்தால்' வேள்குயக்கொண்டானை மாளப் பாடி, பிறகு சான்றோர்வேண்டச் செந்தமிழ்ச்செய்யுளால் அவன் உயிர் மீளப்பாடிய நக்கீரர்கதையும் அவர் உள்ளப்பான்மையையே உரைப்பதாகும்.

இன்னும், இவர்பெருமைவிளக்கும் சான்று வேறொன்றுளது. "தண்டமிழ்வரைப்பில் வண்புகழ்மூவர்" முடிவேந்தர் வெகுளியை இகழ்ந்து, அம்மூவரும் வெறுக்கும் குறுநிலமாண்ட வேள்பாரியை 'ஏந்துகோட் டியானை வேந்த ரோட்டிய-கடும்பரிப் புரவிக் கைவண் பாரி' என்று அவன்பெருமை பாராட்டி, 'நனந்தலைக்கானத் தாளி யஞ்சி' எனும் அகப்பாட்டாற் புகழ்ந்துபாடிய புலத்துறைமுற்றிய தலைத்தமிழ்ப் பாவேந்தரான நக்கீரரின் அறிவறச்சிறப்பை நயவாதவரும் நானிலத்துளரோ? அகத்தழுக்கற்ற அவர் அறமறவா உளப்பெருமைக்கு, அவர்கால அந்தணக்கபிலரின் செந்தமிழ்க்கவிநலம் நயந்து புகழும் அவர்சால்பொன்றே சான்றுபகரும். தொன்றுபுகழ்ப்பாண்டியன் மன்றத்தீண்டிய

புலவருள் தலைமைதாங்கி, 'வாய்மொழிக்கபிலன்' என்று குன்ற மொன்றுடை வேள்பாரியின் நண்பனான பார்ப்பனப்புலவனைப் பாராட்டி, என்றுமுள செந்தமிழில் இனியகவிபாடிப் பொன்றுத லறியாப் புகழ்மிகுமிவர்தம் பெருமை, பிறர்புகழ்பொருத புலவர்க் கென்றும் அறிவறமுணர்த்தப்பிறந்தவர் இவரெனச் சிறந்து விளங்கும்.

மாயாத வாய்மையும், கரவறியாக்கருத்துரிமைத் தனிச்சிறப் பும், இவர் செய்யுட்செவ்விக்கு ஏற்றம் தரும் ஊற்றமாகும். அரிய பெரிய உண்மைகளைத் திட்ப ஒட்பத் திறம்பட அஞ்சாதுரைக் கும் அறிவறம் துறந்து புலவரைச் "சொன்னதைச்சொல்லும் கிள்ளைகளாக்கும்" கொள்கையும் வழக்கும் வெறுக்கத்தக்கவை. நல்லவையெல்லாம் சொல்லற்குரியவை. கல்லார், கற்றார் எல்லார்க் கும் நல்லது, மெய்யெனக் கண்டதைப் பொய்யாதுரைக்குங் கருத் துரிமை. இச்சால்புடைய புலவர் எல்லா மொழிகளிலும் என்ஞான் றும் சிறந்துவிளங்குவர். பழந்தமிழுலகில் அத்தகவுடைய வித்த கர் பலராவர். வள்ளுவர்வாய்மையும், கபிலரின் மெய்ம்மையும் வியவாதநாள் இல்லை. மக்களுக்குள்ளே பிற்காலத்தமிழகத்தும் கம்பர், சேக்கிழார்போன்ற மெய்ப்புலவர்க்குப் பஞ்சமில்லை. இவர் போல்வாரெல்லாரும், தத்தம் செய்யுளில் நித்தமும் நிலைத்த வுண்மைகள் கரவாதுரைக்கும் பொய்யில்புலவராவர். எனினும், கண்டதுமொழியும் கவிக்கருத்துரிமையைக் கையாண்ட பெருமை யோடமையால், அவ்வுரிமைக்காக அஞ்சாமல் யாரொடும் போர் புரிந்து அப்புலமையறத்தைப் போற்றிய தனிப்பெருமை நக்கீர ருக்கே உரியதாகும். அவ்வறிவறம் மறந்ததால் பிற்காலப்புலமை வறங்கூர்ந்தது. தமிழுளவில் தற்காலம் அத்திறம் புதுக்கிய வித்த கர், நாட்டன்பூட்டித் தமிழர்செவியில் தன் பாட்டின்பத்தேன் பாயவைத்த பார்புகழ்கவிஞர் பாரதியாராவர். கருத்துரிமை எல்லார்க்கும் நன்றும்; கவியியற்றும் புலவருக்குத் தனிச்சிறப்பாம்.

*S. S. Bharati,*

பசுமலை.

உ

# மதிப்புரை

நவநீதப்பாட்டியல் புத்துரையுடன்:—பிரபந்த இலக்கணங்கூறும் பழந் தமிழ்நூல்களுள் நவநீதப்பாட்டியலும் ஒன்று. இதனை இயற்றிய ஆசிரியர் பெயரும் சமயமும் ஒழிந்த மற்றவை நன்கறியுமாறில்லை. 102 கட்டளைக்கலித் துறைச்செய்யுளானியன்ற இந்நூலிற் சில செய்யுட்களே இதுவரை வெளி வந்துள்ளன. இந்நூலுக்குச் சிறந்த பழையவுரையொன்றும் உண்டு. அதனை இயற்றியவர் பெயர் முதலியனவும் புலப்பட்டில. சென்னைப் பல்கலைக்கழகத் துத் தமிழாராய்ச்சித்துறைத்தலைவர் திருவாளர் ராவ்ஸாஹிப். S. வையா புரிப்பிள்ளையவர்கள், இந்நூல் மூலம் முழுவதையும் நன்கு ஆராய்ந்து திருத்தியும் அதற்குப் புத்துரையொன்று எழுதுவித்துச் சோதித்துச்சேர்த் தும் நல்லகாகிதத்தில் திருத்தமும் அழகும் அமைய அச்சிட்டு, மயிலைத் தமிழ்ச்சங்கத்தின் முதல் வெளியீடாகப் பிரசுரித்துள்ளார்கள். இதனுள் மூலம், பல ஓலையேட்டுச்சுவடிகள்கொண்டு ஒப்புநோக்கிச் செப்பஞ்செய்யப் பட்டுள்ளது. பிரதிபேதங்கள், கீழ்க்குறிப்பிற் காட்டப்பட்டுள்ளன. உரை, பாட்டியல் பலவும்நோக்கி ஐயந்திரிபகல விளக்கி எழுதப்பட்டுளது. நூற் பொருள் பலவும் நன்கு விளங்குமாறு சேர்க்கப்பட்ட பிரபந்த அகராதி முதலிய பல அநுபந்தங்களையுடைய இப்பாட்டியல், பிறபாட்டியல்களினும் கற்பார்க்குப் பெரிதும் பயன்படத்தக்கது. இவ்வரியநூலை வெளியிட்டுதவிய மயிலைத்தமிழ்ச்சங்கம், மேலும் இவ்வாறே தக்கோர்களாற் பல தமிழ்ப் பெருநூல்களை ஆராய்ந்து வெளியிடுவித்தும் வேறு துறைகளில் தமிழ் வளர்ச்சிக் காவனசெய்தும் நீடு வாழ்க. இதன் அடக்கவிலை—ஒருபிரதி ரூ. 1—2—0. மூன்று பிரதிகள் ரூ. 3—3—0. கிடைக்கும் இடம்—மயிலைத் தமிழ்ச்சங்கம், சென்னை.

# என்பெருந்தெய்வம்

இச்சொற்றொடர் வாயுபுதல்வனான தூய மாருதி, ஏதமில்மகளாஞ் சீதாதேவியை வாயாரப்புகழ்ந்து இராமனிடம் கூறியதாகும். புவிமகளிருள் ஒருத்தியாகிப் பல்வேறு துயர்களும் துய்த்து முடிவில் இன்பமெய்திய ஒரு மகளையும் பெருந்தெய்வம் என்று கூறியதென்? என்று சிலர் வினவக்கூடும். அவள் கருவாய்ப்பட்டுப் பிறவாமல் ஜனகன்து யாகசாலையிற் கொழுமுனையிற் பிறந்தவள் என்ற வரலாறு ஒருபுறமிருக்க, அவள்பால் அநுமன் கண்ட தெய்வத்தன்மை யாதென்று ஆராய்வோம்.

இயல்பாக வினையினின்று நீங்கியிருப்பது இறைவன் அல்லது இறைவியின் தன்மைகளில் ஒன்று. சீதாபிராட்டியார் புவியிற்றோன்றி மக்கட்பண்புகளுடையவராய் இன்பதுன்பங்கட்குட்பட்டு விளங்கியவர் என்பது இராமாயணத்தில் நாம் கண்டது. கம்பநாட்டாழ்வார், அப் பிராட்டியை, "வினைகளைக் கற்பின் வென்ற விளக்"கென்று கூறுவர். பிறவியிலே செல்வச்சீமானாகப் பிறப்பது உயர்வெனினும், தனது ஆள்வினையாற் பொருளீட்டித் தனவானாவது சிறந்ததென்பர். மன்னனாகப்பிறப்பதிலும், தனது ஆண்மையாற் பிறரை வென்று பிறர்நாடுகளை அடிப்படுத்து அரசனாக வருவது சாலச் சிறப்புடைத்தாகும். அவ்வாறே தனது கற்பின்வலியால் வினைகளைவென்றுயர்ந்த மேம்பாடுதோன்றப் பிராட்டியாரைப் பெருந்தெய்வம் என்றான்.

இனி, புகழப்பெற்ற பூவையார் ஒருபுறமிருக்கப் புகழ்ந்தவர் தகுதியை உன்னிநோக்குவோம். ஓர் இரவலன் தன் பசிப்பிணியைத் தீர்த்த ஒரு புரவலனை அல்லது வள்ளலைக் காமதேனுவே, கற்பகதருவே என்று புகழலாம். ஓர் அடிமை தனக்குச் சிறிய உதவிபுரிந்த தன் ஆண்டானைக்குறித்துப் பலவாறு புகழலாம். அன்புகாரணமாக ஒருவர் ஒருவரை அளவுகடந்து புகழக்கூடும். இப்புகழ்ச்சிகளை உள்ளபடி ஏற்றுக்கொள்ளுதல் அறியாமையின்பாற்படும். ஆனால் இங்குப் பிராட்டியாரைப் புகழ்ந்தவன் யாவன்?

"காதலன்முகனுங் கணிப்பரிய கலையனைத்துங் கதிரோன்முன்சென்
றோதினன் ஓதநீர்கடந்து பகைகடிந் துலகை யுய்யக்கொண்டான்"

என்று கம்பர் புகழ்ந்துகூறும் தூண்டாநீண்டதோள் ஆண்டகையாகும்.

பிரமதேவனாலும் எண்ணி அளவிடற்கரிய நுண்ணிய கலைகள்பலவற்றை யும் ஒற்றையாழித்தேரோனாகிய ஒளிக்கற்றைக் கதிரவன்முன்பு சென்று கொண்டே கற்றுத்தேர்ந்து, அறிவாற் கடக்கும் கல்விக்கடல் கடந்தது மட்டுமன்றி, உவர்நீர்க்கடலையும் தன் வன்மையாற்கடந்து, தேவ இருடி கண்டகராகிய, இராவணாதியரக்கர்களை வேரோடும் அழித்து உலகம் உய்யு மாறுசெய்த பெருங்கொடைவள்ளலாவன் அநுமன். இவனது கலையறிவின் சிறப்பைக் கதாநாயகனான இராமபிரானே விளக்கியுள்ளார். கிட்கிந்தைப் படலத்தில்,

"இல்லாத வுலகத் தெங்கும் இங்கிவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே யென்னுங் காட்சி
சொல்லாலே தோன்றிற் றன்றே யார்கொல் இச் சொல்லின் செல்வன்
வில்லார்தோ ளிளைய வீர விரிஞ்சனோ விடைவல் லானோ"

(கம்பரா. அநுமப். 20)

எனக் கூறியதைக் காணலாம். இவன் கல்லாதகலைகள் இவ்வுலகில் இல்லை. வேதங்கள் முற்றுமுணர்ந்தவன் என்பது இவனது பொருள்பொதிந்த சில சொற்களாலேயே தெரிகின்றது. இவ்வாறு சொல்லையே தனக்குச் செல்வ மாகக்கொண்டுள்ள இவ்வீரன் யாவனாக இருக்கக்கூடும்? பிரமதேவனோ! அல்லது விடைப்பரியூரும் விமலனான சிவபெருமானோ! என ஊகிக்கின் றான். திருமாலாகிய தான் அவன்கண்முன் அப்பொழுதுநின்றதுபற்றித் தன்னையொழிந்த மற்ற இருவரையும் குறிப்பித்தான். இங்ஙனம் இராமனாற் புகழப்பட்டதுமன்றி, இராமவிரோதியாய், அவன் அம்பால் வீழ்த்தப்பட்ட வாலி, அநுமனைக்குறித்து ரகுநந்தனனிடம், "அநுமனென்பவனை யாழியைய நின் செய்யசெங்கைத் தனுவெனநினைதி" என்று கூறுமாறு தோள்வலிமிக்க வன். செந்தாமரைபோன்ற தனது சிவந்த கைகளில் இராகவன்பிடிக்கும் வில் எத்தகைய அரியகாரியங்களைச் சாதிக்குமோ, அத்தகைய காரியங்களை அநுமன் ஆற்றக்கூடும் என்பது இதன்கருத்து. இராமன் வாளிக்குப் பிறர் ஏவும் வாளிகட்கில்லாத தனிப்பெருமையும் ஒன்றுண்டு. அது பகைவன்மீது ஏவப்பட்டவுடன், அவனது மார்பின் ஊடுருவிச்சென்று பின்னர் இராகவ னது அம்பறாத்தூணியில் திரும்பவும் வந்து புகுமென்பர். அவ்வாறே போர்க் களத்திற் பகைவரை வென்று அவர்கள்கையிற் சிக்காமல் திரும்பும் ஆற்றல் சான்றவன் அநுமன் என்ற குறிப்பும் இங்கே தோன்றும். இன்னும் இவனது

பல்வேறு பண்புகளும் அளவிடமுடியாதன. சாம்பவான், அநுமனைப்பற்றிக் கூறும் செய்யுள் ஒன்றை நோக்குவோம். அவனது பெருமையைப்பற்றிக் கூறப்போந்த அவ் எண்கின்வேந்தன், அநுமனை முன்னிலைப்படுத்தி,

"நீதியினின்றீர் வாய்மையமைந்தீர் நினைவானும்
மாதர்நலம் பேணுதுவளர்ந்தீர் மறையெல்லாம்
ஓதியுணர்ந்தீர் ஊழிகடந்தீர் உலகினும்
ஆதியயன்றானே யெனயாரு மறைகின்றீர்"

என்று புகழ்கின்றான். நீதிக்கு நிலைக்களமாக உள்ளீர். உண்மைவடிவாகவே இருக்கின்றீர். மகளிரின்பத்தைப்பற்றியநினைவேயில்லாத நைஷ்டிகப்பிரமசாரியாவீர். மறைகளெல்லாவற்றையும் முறையாகப் பாடியமுட்பட ஐயந்திரிபறக் கற்றுவல்லீர். சிரஞ்சீவியாக இருக்கின்றீர். ஆதிப்பிரமனே நீர் என்று கூறும் தகுதியும் பெருமையும் வாய்ந்து விளங்குகின்றீர் என்றான். இவ்வாறு நீதிமானாய், வாய்மையனாய்க் கலையறிவுசான்றவனாய்ச் சொல்வன்மைமிக்கவனாய், மகோபகாரியாய், இராமபக்தனாய்க் குணக்குன்றாயொளிரும் அநுமன் சீதாதேவியைத் தன்பெருந்தெய்வமாகக் குறிப்பிட்டுப் புகழ்வானாகில் அவ்வுரை வெற்றுரையோ புனைந்துரையோ ஆகாது வாய்மையுரையேயாம் என்பது தெளிவன்றோ.

இனி, அநுமன் இவ்வண்ணம் புகழுமாறு சானகியிடம் அமைந்திருந்த உயர்ந்த பண்புகள் யாவையென ஆராய்வோம். கலங்காத வீரியனான இலங்காபுரியரக்கனாற் காவல்செய்யப்பட்டு, மாதவி மரத்தினடியில், பிராட்டியார், அரக்கியர் அளவற்றார் புடைசூழ விளங்கியதை அநுமன் நோக்கினான். தனது ஆருயிர்நாயகன்பிரிவாற்றாது பெருக்கிய கண்ணீர் வெள்ளத்தில், பொய்கையின்நடுவில் அமர்ந்துள்ள அன்னம்போன்று விளங்கிய மிதிலைப்பொன்னைக் கண்டான். . இராமபிரான்கூறிய இலக்கணங்கள் யாவும் அவள்பாலிருந்ததை நினைந்து அகமகிழ்ந்தான். மாசேறிய மணிபோன்றும், கதிரவனொளிபட மழுங்கிய ஒளியுடன் தோன்றும் மதிபோன்றும், உடல்மெலிந்திருந்ததைக் கண்டு, அன்னவள் கற்பிற்குப் பங்கமில்லையென்று ஓர்ந்தான். பல்வேறு வரங்களும்பெற்று எவரும் எளிதில் வெலற்கரியனாய்நின்ற இராவணனிடம் அகப்பட்டும், தன் மனவலியாலும், கற்பின் திண்மையாலும், தனக்கு மானபங்கம் நிகழாது தற்காத்துக்கொண்ட பிராட்டியின்திறத்தையெண்ணிப் பெருமிதமெய்தினான்.

"தருமமே காத்ததோ சழக்கன் றன்வினைக்
கருமமே காத்ததோ கற்பின் காவலோ
அருமையே அருமையே யாரிதாற்றுவார்"

என்று வியந்து கூறினன். என்றும் அறத்தைத் தீவினை வெல்லமுடியாதென்று மனத்துட்கொண்டான். வன்மைவாய்ந்த இடையினரான கொடிய அரக்கியர்கள் கடும்புலிக்குழாம்போல நெருங்கிச்சூழ, மழைத்துளிகாணாத மலை மூலிகைபோன்று வாடிச் சிறிதும் கண்ணுறக்கமின்றி, இடையறாது கண்ணீர் பெருக்கிப் பிரிவெனும் துயர் உருவுகொண்டாலன்னபிணியோடு, கண்ணீரால் நனைந்த ஆடை, சோகமிகுதியானெழுந்த நெட்டுயிர்ப்பின்வெப்பத்தால் உலரப்பெற்று, ஒற்றைச்சடையினளாய்ச் சுருதிநாயகனை இராமபிரான் வரவையுன்னித் திசைதொறும் சுற்றிநோக்கிநின்ற கண்களையுடைய பெண்ணருங்கலத்தைக் கண்ணாரக்கண்டான். கழிபேருவகைகொண்டான். இராமபிரானிடம் அவள்கொண்டிருந்த அளவுகடந்த அன்பும், அவளது திண்ணிய மனமும், கற்பின் வலியும், யாவும் மதிநுட்பம்வாய்ந்த அநுமன் அறிந்து தேறினன்.

இந்நிலையில், இராவணன் பிராட்டியிருக்குமிடம் வந்துசேர்ந்தான். வானவர்தேவிமாரும் வலியவந்து வழிபட மூவுலகின் தனித்தலைவியாய் யாவரும் வழிபடவிளங்கும்பெருமையைத் தனக்குத்தருவதாக இராவணன் கூறிய கடுமொழி தன் செவிகளைத் துளைக்க, அவற்றைத் தன் தளிர்க்கையாலே பொத்திக்கொண்டாள். தனது ஆருயிர்த்துணைவனான இராமபிரானதுபகழி மேருவையும் உருவுமென்றும், பதினான்குலகங்களையும் அழித்துவிடுமென்றும் தன் கணவனும் மைத்துனனும் இல்லாத சமயம்நோக்கித் தன்னைத் துறவியினுருக்கொண்டு தூக்கிவந்தது அச்சங்காரணமாகநிகழ்ந்ததென்றும், இவ்வாறு பாவமும் பழியும் விளைக்குந்தொழிலை மேற்கொள்வதால், அவனுக்கு அழிவு விரைவில் ஏற்படுமென்றும், சிறிதும் கலங்காது சனகன் பயந்த கனகம் மறுமாற்றம் அளித்ததை வாயுமைந்தன் கண்டு தெளிந்தான்.

பின்னர், தன்னைத்தான் நொந்துகொண்டு, தாசரதியின் பிரிவாற்றாது, உலகோர்கூறும் அலர்க்கஞ்சித் தன் ஆருயிர் துறக்கத்துணிந்த வைதேகி தன் கூந்தலினாலேயே தன்கழுத்தை வரிந்து சுற்றிக்கொண்டு ஓர் மாதவிப் பொதும்பரை யெய்தினள். இதனைப் பேரறிவாளனான அநுமன் கண்டான்.

அவள் உள்ளக்கருத்தைத் தெள்ளிதின் உணர்ந்தான். கலங்காதநெஞ்சமும் கலங்கினன். பரமபதியான ஆடவர்திலகன் ஆருயிர்த்துணைவியின் திருமேனியைத் தீண்டுதற்குக் கூசிக் காலம் தாழ்ப்பின் உலகிற்கே பேரிடர் விளையுமே என்ற அச்சமுடையவனாய்ப் பிராட்டியார்செவிகளிற்படும்படி "அண்டர்நாயகனருட்டூதன்" என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு தொழுதகையனாய் அவள்முன் தோன்றினன். அவளும் அவன்பாற் சிறிது ஐயுற்றபோதிலும், அவன் அளித்த கணையாழியின் அடையாளத்தாலும் கூறிய சில மறையுரைகளாலும் தெளிந்து அநுமன் வினவுதற்குரியவன் என மனத்துட்கொண்டு, தன்னை இராவணன் கவர்ந்துவந்தபின்னர் நிகழ்ந்த செய்திகளைக் கேட்டாள். அநுமன் நிகழ்ந்தவற்றைக் கூறிப் பிராட்டியைத் தனது திண்புயத்தில் அமர்ந்தருளினல் இராகவனிடம் சேர்த்துவிடுவதாகக் கூறப் பிராட்டியார் அந்த இராமதூதனை நோக்கி,

"அரியதன்று நின்னாற்றலுக் கேற்றதே
தெரியவெண்ணினை செய்வதும் செய்தியே
உரியதன்றென வோர்கின்ற துண்டதென்
பெரியபேதைமைச் சின்மதிப் பெண்மையால்"

எனவும்,

"அன்றியும் பிறிதுள்ளதொன் றுரியன்
வென்றி வெஞ்சிலை மாசுணும் வேறினி
நன்றியென்பதம் வஞ்சித்த நாய்களின்
நின்ற வஞ்சனை நீயும் நினைத்தியோ"

எனவும் கூறுகின்றாள்.

அகலம் நீளம் ஆழங்கள் அளக்கவியலாத பேராழியை எளிதிற்கடந்த சிறிய திருவடிக்குத் தன்னைச் சுமந்துசென்று இராமபிரானிடம் சேர்ப்பித்தல் பெரியதோர் வேலையன்றென்றும், அவனது ஆற்றலுக்கேற்ற பணியேயென்றும், அவன் எண்ணியதில் குற்றமொன்றும் இன்றென்றும், அவன் எடுத்தகாரியத்தை இனிதுமுடிப்பான் என்பதில் தனக்கு முழுநம்பிக்கையுண்டென்றும், ஆனல், தனது பெண்மையால் அக்காரியம் பொருத்தமானதாகத் தனக்குப் புலப்படவில்லையென்றும், அநுமன் வேண்டுகோட்கிணங்கித் தான் அவனது தோள்களின்மீது ஆரோகணிக்க உடன்பட்டால், 'பிறனொருவன் தன் மனையாளைக் கவர்ந்துசெல்லவும், அவளை மீட்கவழியின்றி

அவமே இராமன் வில்லைச் சுமந்துதிரியும்' என்ற அபவாதம்நேர்ந்து, தன் நாயகன் பிடித்த வில்லிற்கும் அவனது ஆண்மைக்கும் மாசுநேருமே என்றும், வஞ்சனையாகத் தன்னைக் கவர்ந்த அரக்கர்களைப்போன்றே அநுமனும் இராவணாதிகள் அறியாமல் தன்னைக் கொண்டுசென்றால், இருவர்க்கும் உள்ள வேறுபாடு அறிதற்கரிதாகுமென்றும் பலபடத் திறமாகப் பேசினாள். பின்னரும், கற்பரசியாகிய தான் தனதுசொல்லால் இராவணாதியரைச் சுடக் கூடும் என்றும், ஆயினும், அவ்வாறுசெய்தால் இராமபிரான் வில்லாண்மைக்கு ஓர் இழுக்குண்டாகுமென்று வாளாவிருந்ததாகவும் கூறுகின்றாள்.

பின்னும், அவள், தான் சுத்தவீரனை இராமபிரான் திருமேனியன்றி வேறொன்றும் தீண்டாதவள் என்றும், ஒருக்கால், மாசுமறுவற்றவனும், நினைவாலும் மாதர்நலம் பேணாது வளர்ந்தவனும், தூய பிரமசாரியுமான அநுமன் திருத்தோள்களில் தான் அமர்வதால் குற்றமில்லையென்று சிலர் கருதினும், வேகமற்று அடங்கியுள்ள பொறிகளையுடைய அவனையும் உலகம் உருவத்தால் ஆணென அறையுமாதலின் அவனது உருவைத் தீண்டுதல் கூடாது என்றும் சொல்லுகின்றாள். இத் தூயவுரைகளைக் கேட்ட அநுமன்,

"நன்றுநன்றிவ் வுலகுடை நாயகன்
தன்றுணைப் பெருந்தேவி தவத்தொழில்"

என்று களித்துத் தன்மனத்தின்கணிருந்த சங்கையும் இடரும் நீங்கப்பெற்றான். பின்னர் 'இராமனிடம் தான் கூறவேண்டிய செய்திகள் உண்டெனில் அருளவேண்டும்' என்று அநுமன் இரப்ப, மிதிலைமன்பெற்ற மதிநுதற்றேவி தான் ஒருமாதந்தான் உயிர்தரித்திருக்கக்கூடும் என்றும், அதற்குள்ளாக இராமன் தன்னை மீட்காவிடின், தான் இறந்துபடுவது நிச்சயம் என்றும் கூறி, முடிவாக,

"ஈண்டுநானிருந் தின்னுயிர் மாயினும்
மீண்டுவந்து பிறந்து தன்மேனியைத்
தீண்டலாவதோர் தீவினை தீர்வரம்
வேண்டினாள் தொழுது"

என்று விளம்புமாறு கூறினாள். ஒத்த அன்புடன்வாழும் தலைவன் தலைவியர் ஒருபிறப்பிலிருந்தபடியே வரும் பிறப்புக்களிலும், தம்பதிகளாக விளங்கக் கூடும் என்பர். இதுபற்றியன்றோ மணிவாசகப்பெருமான் தமது திருச்சிற்றம்பலக்கோவையில்,

"பிறப்பா னடுப்பினும் பின்னுந் துன்னத்தகும் பெற்றியர்"

என்று தலைவன் தலைவியரது அன்பின்தன்மையை விளக்கிக்கூறினர். திருவள்ளுவரும்,

"இம்மைப்பிறப்பிற் பிரியலம் என்றேனக்
கண்ணிறை நீர்கொண்டனள்"

என்ற குறளில், இக்கருத்தையே எழில்பெற அமைத்தார். ஒரு தலைவன் தனது தலைவியிடம், 'இப்பிறப்பில் நான் உன்னைவிட்டுப் பிரியேன்' என்று கூறியவளவில், அவள் கண்களில் நீர்ததும்பின. இதற்குக்காரணம் மறுபிறப்பில் பிரிந்துவிடுவானோ என்ற ஏக்கம் என்று தெளிவித்தார். பிராட்டியும் ஒருக்கால் தனக்கு அகாலமரணம் எய்தினல், மறுபிறப்பிலேனும், இராமன் திருமேனியை மனைவி என்றமுறையில் தீண்டும்பேறு கிடைக்கவேண்டும் என்றும், தான் கருதியபடியே அவனும் கருதினலன்றி அவ்வொற்றுமை வாய்க்காதாகலின் அவனிடம் தன் உள்ளக்கருத்தை தெரிவிக்கும்படியும் வேண்டிக்கூறுகின்றாள். பிராட்டியின் பதிபக்திக்கும், கற்புநிலைக்கும் வேறு சான்றுகளும் வேண்டுமோ.

நிற்க, மீட்சிப்படலத்தில் வீடணன்வேண்டுகோட்கிணங்கிக் கோலங் கொண்டுசென்ற பிராட்டியை இராமன் பலவாறு கடிந்து, தீப்புகுந்து தன் கற்பினைத் தெரிக்குமாறுகூறச் சானகி நாயகன்கட்டளையை மேற்கொண்டு தீயிற்புகுமுன்,

"மனத்தினன் வாக்கினன் மறுவுற்றேனெனிற்
சினத்தினற் சுடுதியாற் றீச்செல்வா"

எனக் கூறித் தீயிற்பாய்ந்ததாகச் சொல்லப்பட்டது. இவ்விடத்து மனத்தினல், வாக்கினல் என்றுமட்டுங் கூறிக் காயத்தினல் என்று கூறுமல் ஒழிந்ததனல், காயம் மறுவுற்றிருக்கக்கூடுமோ என்ற ஐயம் நிகழ்தல் கூடும். ஆயினும் உபலக்கணத்தால் காயத்தினல் என்பதும் இங்கே பெறப்படும். எனினும் காயத்தினல் என்று விதந்துகூறவேண்டிய அவசியம் உண்டோ என்று ஆராய்வோம்.

வான்மீகிராமாயணத்தில், இராவணன் பிராட்டியாரின் சிகையைப் பற்றித்தூக்கித் தன் துடையில் வைத்துக்கொண்டு விண்ணியங்கு விமானத்தேறிச் சென்றதாகக் கூறப்பட்டுளது. ஆனல் எந்த மகளிரையும் அவர் இணக்கமில்லாதவழிச் சென்று தீண்டுவானல்லன். இராவணன் தலை

வெடித்துவிடும் என்ற சாபமுண்டாகலின், சானகியின் திருமேனியை அவன் தீண்டியிருப்பின் அவன் அழிந்துபட்டிருப்பான். ஆதலின் இச்சாபத்திற்கு அஞ்சியே பஞ்சவடியில் அவள் தங்கியிருந்த பன்னசாலையுள்பட ஒருயோசனை தூரம் நிலத்தை அகழ்ந்துசென்றதாகக் கம்பராமாயணம் குறிக்கும். இவ்வாறு முதனூலினின்றும் மாறுபட்டுக்கூறும் மாபெருங்கவிஞன் இச்செய்தியைப் பலஇடங்களிலும் நினைவூட்டுவதைக் காணலாம். ஆரணியகாண்டத்தில், பிராட்டியை இராவணன் கவர்ந்துசெல்லநினைந்து, "கீண்டானொருயோசனை கீழொடுமேல்" என்றும், பிறவிடங்களில் "மண்ணொடுங் கொண்டுபோனான் வானுயர் கற்பினுடன்—புண்ணியமேனிதீண்ட அஞ்சுவான்" என்றும், "கீண்டுகொண்டெழுந் தேகினன் கீழ்மையான்" என்றும் கம்பர் கூறியுள்ளார். இவ்வுண்மையை நன்குணர்ந்த மாருதன் காதற்செல்வன், இராமபிரானிடம் ஏகித் தான் இலங்கையிற் கண்டவற்றைக் கூறத்தொடங்குகையில், "கண்டனன் கற்பினுக் கணியைக் கண்களால்" என்று மகிழ்வொடுங் கூறினான். வெகுநாட்களாகப் பிராட்டியைத் தேடிச் சென்றிருந்த அநுமான், தன் தேவியைக் கண்டுவருவானோ காணாது திரும்புவானோ, என ஐயுற்றுக் கதிரவன்கான்முளையோடு உரையாடிக் கவன்ற இரகுநந்தனன், தான் அனுப்பிய தூதன் வெற்றியுடன்வந்தான் என்றறியுமாறு 'கண்டனன்' என்றும், ஒருக்கால் இராவணனால் தீண்டப்பெற்றுக் கற்பிழந்தநிலையில் கண்டிருப்பானோ என்றெழும் ஐயத்தைப் போக்குதற்குக் 'கற்பினுக்கணியை' என்றும் கூறியது போற்றற்பாலது. மகளிர்க்குக் கற்பு அணியாகும் முறைமாறிச் சானகி கற்பிற்கே அணிகலமாக ஒளிபெற்று விளங்கினாள் என்றான். இனிக் 'கண்களால்' என்று கூறுவானேன்? கண்ணின்றிப் பொருள்களைக் காண்டல் கூடாதன்றே எனின் இங்குக் கண்களால் என்ற இடத்தில் தன் கண்களால் என்பது பொருளன்று. வைதேகியின் கண்கள்மூலமாகவே அவளது கற்பின்நிலையைக் கண்டான் என்றதாகக் கொள்ளுதலே முறை. முன்னரே பிராட்டியின்கண்கள் நிரந்தரம் நீர்பொழியும் தன்மையால் 'மழைக்கணென்பது காரணக்குறியென வகுத்தான்" என்றும் "கண்ணினீர் கடல்புகக் கலுழ்வாள்" என்றும், "கண்ணினீர்ப்பெருந் தடத்திடையிருந்ததோர் அன்னத்தன்மையாள்" என்றும் கூறப்பட்டன. இவையெல்லாம் உற்றுநோக்கிய மாருதி இராமபிரானிடம், "அணங்கனாளைக் கலங்குதெண்டிரையிற்றூய கண்ணனீர்க் கடலிற் கண்டேன்" என்று மொழிந்தான். இலங்காபுரியின் எழுநூறு

யோசனை அளவிலும், சுற்றித்திரிந்து, எங்கும் "களிக்கின்றாரலாற் கவல் கின்றார்" ஒருவரையும் காணுதநிலையில், ஒருத்திமட்டும் கண்ணீரும் கம்பலையு மாக மனவாட்டத்துடன் இருந்தாள் எனின், அவள் இரகுகுலநாதனை ஸ்ரீராமபிரானின் திருமனையாகிய சானகியன்றி வேறு யார்? என்ற உறுதி யுடன், "அரவின்நீங்கிய தேவனே 'அவன் இவள் கமலச்செல்வியே" என்று, மதிநுட்பம் நூலோடுடைய மாருதி தெளிந்து தேறியவன் ஆகலின், பிராட்டியின் விழிகளைக்கொண்டே அவளைப் பிராட்டியென்று தெரிந்து கொண்டதாகக் கூறினான். மேலும் கூறுவான்புக்கு, அவள் தான் பிறந்த குலத்தையும், புகுந்த குலத்தையும், தனது சிறந்த பண்புகளால் உயர்த்தி நின்றாள் என்றும், அவள் ஆன்ற பெரிய தவத்தினள் என்றும், உயர்ந்த குடிப்பிறப்பின் தன்மையும் பொறுமையும் கற்பும் அவள்பால் நிறைந்து விளங்குவதைக் கண்டதாகவும் கூறி, இராவணன் எவ்வகையினும் அவள் திருமேனியைத் தீண்டவில்லை என்று முன்னர்ப் பலஇடங்களிலும் குறித்த தற்கேற்ப, அக்கொள்கைக்கே மகுடம்வைத்தவாறு,

"...........................................கற்பச்
சோலையங் கதனின் உம்பி புல்லினுற் றெடுத்த தூய்
சாலையி னிருந்தா ளைய தவஞ்செய்த தவமாந் தையல்"

என அழகுபெறக் கூறினர். இலங்கைமாநகரையே மிதிக்கவில்லையென்றும் பஞ்சவடியில் இளையபெருமாள் அமைத்த தூய பன்னசாலையிலேயே விளங்கி னள் என்றும், அவள் தவமே தவஞ்செய்துபெற்ற தவமகள் என்றும் வாயார வாழ்த்தியுள்ளார். சீதாபிராட்டியே அநுமனிடம்,

"ஆண்டு நின்றும் அரக்கன் அகழ்ந்துகொண்
டீண்டு வைத்த திளவ லியற்றிய
நீண்ட சாலையொடு நிலைநின்றது
காண்டி யைய நின் மெய்யுணர் கண்களால்"

என்றும்,

"தீர்விலே னிதொருபகலுஞ் சிலை
வீரன் மேனியை மானுமில் வீங்குநீர்
நார நாண்மலர்ப் பொய்கையை நண்ணுவேன்
சோரு மாருயிர் காக்குந் துணிவினுல்"

என்றும் கூறுகின்றாள். பஞ்சவடியினின்றும் இராவணன் ஒருயோசனை நிலத்தொடுமேல் அகழ்ந்துசென்றதும், அந்த நிலவெல்லையிலேயே இளைய பெருமாள் அமைத்த இலைக்குடில் அடங்கியிருந்ததும், ரகுவீரனது மேனி போன்ற நீலநிறம்வாய்ந்த பொய்கையொன்று அதனருகிற் றிகழ்ந்ததும், தளரும் ஆருயிரைக் காக்கவேண்டி அப்பொய்கைநீரைமட்டும் சீதாபிராட்டி பருகுவது வழக்கமென்பதும் இங்கே கூறப்பட்டன.

மேற்கூறியவற்றினின்று பிராட்டி மேனியை இராவணன் தீண்டவில்லை என்பது நன்கு பெறப்படும். ஆகவே காயத்தினால் மறுவிலள் என்று கூறுவ்து மிகையேயாகும். இவளது கற்பெனும் பெருந்தீயினால் தீக்கடவுளும் வலிகுன்றி வாடிய செய்தி "மனத்தினால் வாக்கினால்" என்ற செய்யுளில் அடுத்துக் கூறப்பட்டது.

முடிவாக, அறமும் சீலமும், அணிமிகு கற்பும் வாய்ந்த ஜனகநந்தினியை இராவணன் தீண்டவில்லையென்ற செய்தி மேலே பல மேற்கோள்கள் கொண்டு விளக்கப்பட்டது. இலங்கைத்தரையையும் மிதிக்காமலும், அந்நகர் நீரையும் பருகாமலும் ஓராண்டுகாறும் மாற்றான்தேயத்துவதிந்த தவப் பெருஞ்செல்வியை,வாயுவின்மைந்தனை தூய அநுமன், தன் பெருந்தெய்வம் எனக் கூறியது மிகவும் பொருத்தமேயன்றோ. இராமபிரான்முன்னின்று அவனை முன்னிலைப்படுத்தி, "நீவிர் நான் எஞ்ஞான்றும் வணங்கி வழிபடுதற்கு மேற்கொண்ட தெய்வம், நுமது மார்பகத்தில் நீங்காதுறையும் மலர்த்திருவின் அம்சமாகிய போதமார்சனகன் மேதகுமடந்தை அடியேன் கொண்டாடும்பெருந்தெய்வம்" என்று, வினைகளைக் கற்பின்வென்ற விளக்குப் போல்வாளும், பெண்கள் நாயகமாய்ப் பெண்கள்குழுவிற்கே தனது கற்புத் திண்மையால் பெருமையுண்டாக்கித்தந்தவளுமான வைதேகியைப் புகழ்ந்து பாராட்டியதன் கருத்தும் பொருத்தமும் அறிந்து மகிழற்பாலனம்.

E. S. VARADARAJAIYER,

தமிழ் லெக்சரர், அண்ணாமலைநகர்.

# பண்டைத் தமிழர்

நல்லூர். சுவாமி ஞானப்பிரகாசர்

(கூ0-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## III மத்தியதரைக் கடலைச்சூழ்ந்த நாடுகளில் தமிழரின் முன்னோர்

பூர்வகாலம் மத்தியதரைக் கடலைச்சார்ந்திருந்த குலங்களோடு ஒற்றுமைபூண்டோரே தமிழர் என்பது இந்நாட்களில் முன்னணியில்நிற்கும் குலநூல் ஆராய்ச்சியாளர்களுட் பெருவழக்கான துணிபாகின்றது. இதனையுணர்தற்கு நாம் உடற்கூறு அல்லது அங்கவமைப்பு எனும் சாத்திரத்துறையைப்பற்றி ஒருசிறிது அறிந்துகொள்ளுதல் அவசியம்.

மக்கட்படைப்பு ஒன்றே என்பது இன்றைக்கு எல்லா உண்மை விஞ்ஞானசாத்திரிகளும் ஒப்புக்கொண்ட ஒரு உண்மை.

> குலமொன்றாய் நீ படைத்த குறியை அறியாமல் யான்
> மலபாண்டத் துள்ளிருந்து மயங்கினேன் பூரணமே

என்றபடி, நாத்திகர்கள் சிலர் பல ஆதிமனுக்குலங்கள் இருந்தன என்று மயங்கியகாலம் போய்விட்டது. இதுதான் என்று நிச்சயமாய்ச் சொல்லக்கூடாத ஓர் இடத்தில் ஆதி ஆணும் பெண்ணும் உண்டாக்கப்பெற்று, அவ்விருவரிடத்துமிருந்தே மனுக்குலம் முழுதும் பலுகிப் பெருகிற்று என்ற உண்மையை மேல்நாட்டிலும் புதிய உலகம் எனும் அமெரிக்காவிலும் இருந்த பழஞ்சனங்களெல்லாரும் ஓரே வாக்காய்க் கூறிப்போயினர். இந்தப் பழைய உண்மை இன்று யாதொரு சமயச்சார்புமில்லாத விஞ்ஞானிகளாலும் "கண்டுபிடிக்க"ப்பட்டிருக்கின்றது. இனி, ஒருகுடும்பம்போல் ஓரிடத்தில் வாழ்ந்துவந்த ஆதிமனிதர் வேட்டையாடுதற்கோ மந்தைகளை மேய்த்தற்கோ வாய்ப்பான புதுப்புதுப் பிரதேசங்களைத் தேடிப்போவோரும், குடும்பக்கலகங்கள் காரணமாய் இடம்

பெயருவோரும், மீன்பிடிக்குந்தொழில் ஆதியவற்றின் மேற்சென்று அயல்நாடுகளிற் கரைபிடிப்போருமாய்ச் சிறிதுசிறிதாகப் பூலோகம் எங்கும் பரந்தகாலையில், அவ்வத்தேசத் தட்ப வெப்ப நிலைக்கும் அவரவர் மேற்கொண்ட தொழில்வகைக்கும் உணவின் வேற்றுமைக்கும் ஏற்ற ஏற்றபடி, அன்னோரது உடற்கூறு விகற்பித்தும் பாஷை மாறுதலடைந்தும் மக்கள் பலவேறுகுலங்களாய்ப் பிரிந்தனர் என்பது குலவேறுபாட்டுநூலின் உண்மைக்கொள்கையாகும்.

"......................................பிரசமலர்ப்
புங்கவன்றன்னருளாற்போந்தமனுப் பூண் ஊன்
தங்கருமத்தாற்சாதிதான்"

என்ற தமிழ்வாக்கு இங்கு நினைக்கத்தக்கது.

தொடக்கத்தில், மனிதகுலம் ஒருவகையில் இளமைபொருந்தியதாயிருந்தகாலத்தில், குலவேறுபாடு விரைவில் நடந்திருப்பது இயல்பென்றும், அவ்வக்குலங்கள் ஒவ்வோரிடத்தில் நெடுங்காலம் வாழ்ந்து அவற்றின் உடற்கூறு ஒருவகையில் இறுகித் தடித்துக்கொண்டபின், அதில் வேறு மாற்றம் நிகழ்தற்கு அதிக காலம் பிடிப்பதாகும் என்றும் கற்றோர்கள் கருதுகின்றனர். மனுக்குலத்தின் இளமைக்காலத்திற் பூமியின் அவ்வப்பாகங்களின் தட்ப வெப்பநிலை வேறாயிருந்தமையும், அக்காலத்து மானிடர் தற்காலத்தாரைக்காட்டிலும் அதிகம் நீண்ட ஆயுள்படைத்து வாழ்ந்திருந்தனர் என எல்லாக்குலங்களிலும் பாரம்பரியம் கூறுகின்றமையும் இங்கு நோக்கத்தக்கன. இறுகித்தடித்த உடற்கூறு என நாம் பெயரிட்ட தேகநிலைமை ஏற்பட்டபின், இன்னகுலம் இன்னஇடத்திற்குரியது என்று பார்த்தவுடனேயே சொல்லிவிடத்தக்கதாய் விளங்குதல் எளிதன்றோ? இவ்வாறே, விஞ்ஞானிகள் உடற்கூற்றைக்கொண்டு தமிழரது ஆதியிருப்பிடத்தை நிச்சயிப்பர். இதைச்சுட்டித் தலையிடத்திற் சில வெளிப்படைகளைத் தருதல் நன்றாகும்.

உடற்கூற்றுல் உண்டாகும் சாட்சி,—மனித உடற்கூற்றின் வேறுபாடுகளுள் தலையைச்சார்ந்ததே முக்கியம் என்பர். சில குலங்கள் நீண்டதலையுள்ளவை; சில வட்டமான தலையுள்ளவை. நீண்டதலைக்குலங்களின் மண்டையோடு குறுக்களவைக்காட்டிலும் நீட்டளவு மிகக்கூடியதாயிருக்கும். வட்டமானதலைக்குலங்களின் மண்டையோடோ குறுக்களவுக்கு ஒருசிறிதுமட்டும் மேற்பட்ட நீட்டளவுகொண்டிருக்கும். இவ்வேறுபாடு எப்படி உண்டாவதெனில், இயற்கையில் அமைந்துள்ள ஏதுக்களால் தாய்வயிற்றிலே குழந்தையின் மண்டையோட்டு என்புகள் ஒன்றோடொன்று பொருந்தும்நாளையில், நெடும்பொருத்துக்கள் ஒன்றுவதற்குமுன் குறும்பொருத்துக்கள் போய் ஒன்றிக்கொண்டால் மண்டையோடு நீண்டுகாட்டும்; இதற்கு எதிராய் நடைபெறும்போது, குறுகிக்காட்டும். ஆட்களின் உயரமும் பெரும்பாலும் மண்டையோட்டுக் குத்தக்கதாகி, நீண்ட தலையுள்ளோர் நெட்டையராவர்; வட்டமான தலையுள்ளோர் குட்டையராவர். ஆயினும், நெடுமையும் குறுமையும் பலமுறை உடற்போஷிப்பின் தன்மையைப் பொறுத்ததாகும். இளமையில் நல்ல உணவுகொண்டு வாழ்வோர் பெரும்பாலும் நெடியராவதுண்டு. முன் குட்டையராயிருந்த சிலர், காட்டுக்குலத்தவர்கள், ஐரோப்பிய நாகரிகத்தை அடைந்தபின் நன்றாய்ப் போஷிக்கப்பட்டதனுல், நெட்டையர்களாய் வந்துள்ளனர் என்ப. ஆகவே, நெடுமையும் குறுமையும் குலவேறுபாட்டுக்குத் தவருத அறிகுறியெனவராது.

முகத்தின் தாடை என்புருவமும் குலவேறுபாட்டைக் குறிக்கும் என்ப. சீர்திருந்தாத குலங்களில் இவ்வென்புகள் அதிகம் புடைத்துநிற்கும்; மோவாய்க்கட்டை மிகச் சிறுத்திருக்கும். இத்தன்மை, மனவேலைதணிந்து உண்ணும் வேலையும் உடல்வலியும் மிகுந்திருப்பதால் உண்டாவது என்ப. சுவாசமுயற்சியின் அதிகப்பாட்டால் நாசி விரிவதும் இதற்கு உபகாரமாகுமாம்;

தாண்டையென்புகள் புறப்பாடாயுள்ள குலங்களில் புத்திதீட்சண்ணியம் மிகுந்தோரும் இருக்கலாம். ஆயின், தனித்தனி ஆட்களையன்றிக் குலம்முழுதையும் நோக்கியே இங்குப் பேசப்படுகின்றது. அதன்று உயர்ந்த நெற்றியும் பின்வாங்கிப்போகும் நெற்றியும் இவ்வாறே மனோவிருத்திக்கும் அதன் குறைவுக்கும் அடையாளமாம் என்பது நன்கறியப்பட்டதொன்று. உதடுகளினும் குலத்துக்குக் குலம் கொண்ட வேற்றுமையைக் காணலாம்.

அப்பாலும் குலவேற்றுமையை வெளிப்படுத்துவது கண்ணும் மூக்கும் எனப்படும். சில அநாகரிககுலங்களின் மூக்கு சப்பட்டையாயும் நாசித்துவாரம் மிக விரிந்தும் இருக்கக் காண்கின்றோம். மூக்குத்துவாரம் விரிவாயோ ஒடுக்கமாயோ இருப்பது சுவாசம் விட்டு வாங்குமிடத்துச் சீதோஷ்ணபேதத்தினால் ஏற்படும் நிலைமை பற்றியாம் என்பர் விஞ்ஞானிகள்.

கண்ணின் உருவத்தைக்கொண்டும் குலம் நிச்சயிக்கப்படும். வாங்கலான உருண்டகண்கள் சீனர் ஜப்பானியருக்கு விசேஷ அறி குறியாவதை அறிவோமன்றோ? கண்களின்நிறம் குலத்துக்குக் குலம் வேறுபடுவதும் ஒன்று. டாக்டர் வேட்டு என்பவர் தாபித் திருக்கிறபடி, கண்களிற்படும் வெளிச்சத்தின் அளவாக அவைகள் பேதப்படுகின்றன என்றும், மந்தாரமான வானத்தின்கீழ் நடமாடும் குலங்களுக்குக் கண்களைச்சார்ந்த நிறப்பசை குறைவுபடுகின்ற மையால் அவைகள் நீலவர்ணம் அடைந்துவிடுகின்றன என்றும், வெயிலொளிமிகுந்த பிரதேசங்களிலேயோ, அவைகளது காப்புக்கு அவசியமான நிறப்பசை மேற்பட்டு, அவைகள் கறுத்த அல்லது கபிலநிறமுள்ளவைகளாகின்றன என்றும் கூறுவர். மயிரின் உருவமும் நிறமும் இதனையொத்த காரணங்களாலேயே மாறிவரும் என்பர்.

இனி, அங்கவமைப்புநூலின்படி தென்னிந்தியாவின் தமிழரை நோக்கும்பொருட்டுப் புரோபசர் புளூர் எனும் அறிஞர் இப்பொருள்படக் கூறியதை இங்கு பாஷாந்தரப் படுத்துவோம்:— "தென்னிந்தியாவின் சனங்களுடைய தலைகளுள் மிக வேற்றுமை

புண்டு. ஆயின் நாம் அக் குடாநாட்டின் தெற்குமூலையை நாடிப் போவோமாயின், அங்கு, திராவிட இந்தியாவில் அவைகள் பெரும் பாலும் நீண்டவையும் சற்றே மிதந்தவையுமாயிருத்தலைக் காண லாம். இவற்றையொத்த தலைகள், பொதுவாய் வெண்மையான தோலோடு, தென்மேற்கு ஆசியாவில் ஆங்காங்கே காணப்படும். தென்இந்திய உடற்கூற்றுமாதிரிகள், நிறத்தையும் மூக்கின் உரு வத்தையும் நீக்கிப்பார்த்தால், செமித்திய மாதிரிகளோடும் வட ஆபிரிக்காவின் மாதிரிகளோடும் மத்தியதரைப்பெருங்கடலின் மேற்குப்பாகத்தைச் சுற்றிவரக் காணப்படுகின்ற சராசரிமாதிரிக ளோடும் ஒப்புமையுள்ளன என்பதில் மயக்கம் இல்லை. இத் தொகுதிகள் எல்லாவற்றுள்ளும் இடையிடையே காணப்படுகின்ற நீண்டு ஒடுங்கி மிதந்த தலைகளும், குறுகிப் பரந்த மூக்குக்களும், பெருத்த (பலமுறையும் தடித்த உதடு அமைந்த) வாய்களும் ஆகிய இவையெல்லாம் பிராஞ்சுதேசத்தின் கிறிமல்டிக்குகையின் அடித்தளத்திலும் கோம்கப்பேலிலும் காப்பாற்றப்பட்டிருக்கின்ற பண்டைக்காலத்து மனித உருவங்களினின்றே பிறந்தன என்று நமக்கு அறிவுறுத்துகின்றன. தற்காலம் இபேரியகுடாநாட்டு (ஸ்பானியாவு)க்கும் தக்கிணத்துக்கும் இடைப்பட்ட சாதியினங்க ளெல்லாம் இப்போது நாம் சொல்லிய பழைய மாதிரிகளுக்கு ஒப் பானவைகளிலிருந்தே பரிணமித்துவந்தன என்பதும், அயற் சார்புகளின் நிமித்தமே குலங்களுள் விகற்பம் ஏற்படுவதாயிற்று என்பதும் அறிஞர்களுட் பெரும்பாலாரதுகொள்கை. தென் மேற்கு ஆசியாவில், குளிர்காலங்களின் நிமித்தம் சுவாசப்பைக்குச் செல்லும் காற்றைச் சூடாக்கும்வகையால் விரிந்த மூக்கும், அத னோடு பொதுவாய் உறுதியான உருவங்கொண்ட கன்னங்களும் அமைவனவாயின. வடஆபிரிக்காவிலும் தக்கிணத்திலும் தோல் மிகக் கறுத்துவந்தமைக்கும், தோல்துவாரங்கள் விரிந்து மயிர் ஒரு வகையில் மென்மையாய்ப்போனமைக்கும் உஷ்ணாந்தரேகைச் சூரியனே காரணமாயிற்று. ஆயின், ஆபிரிக்காவின் முழுக்காப்பிரி யானவன் காம்வமிசத்தாரின் எல்லைக்குத் தென்புறத்திலுள்ள

பாந்த பிரதேசத்தில் பூரணமாற்றம் அடைந்துவிட, தக்கிணத்துத் தென்பாகத்தில் உள்ளவர்களிலோ அந்த மாற்றம் மிகச் சிறிது தான் காணப்படும். மத்தியதரைக் கடற்பாகங்களின் உஷ்ணம் குறைந்து சீதம்சேர்ந்த நிலைமையாலும், அங்கு வசித்தோர் ஐரோப்பாவின் வடமேற்குச் சனங்களோடு மிக உறவுபூண்டமையாலும் அப்பாகங்களிலுள்ளோர் அதிகம் கருமையடையாதோராய் முக ரேகையில் நல்லுருவங்கொண்டோராய் விளங்குகின்றனர்."[1]

இதுவரையும் சொல்லிய குறிப்பைத் தமது நூலிற் புகுத்தியிருக்கின்ற ஸ்லேற்றர் என்பவர் தாமே கூறுவதையும் இங்கு அறிவிப்போம். "மத்தியதரைக்கூட்டத்தினுள் அடங்கிய குலங்களெல்லாம் கபாலத்தின் உருவமும், மயிரின் நிறமும் தன்மையும், கண்களின் நிறமும், முகரேகை அங்கவமைப்பும் மிக ஒத்திருக்கின்றன. தோலின் நிறந்தான் உடனே கண்ணில் தைக்கும்படி நன்றாய் விகற்பித்திருக்கின்ற ஒருவேற்றுமை. திராவிடருள் கருநிறமானது நடுத்தர இத்தாலியருடைய அல்லது ஸ்பானியருடைய வெண்மை தொடக்கம் காப்பிரிக் கறுப்புவரையும் வேற்றுமையுள்ளதாகின்றது. மயிர் அமைப்பிலும், அதிகமென்மையான பஞ்சுபோன்ற அழுத்தமான மயிர்வரையும் வேறுபாடு காணப்படுகின்றது. முகரேகையிலோ உண்மையான மத்தியதரைச்சனங்களைக்காட்டிலும் திராவிடர் அதிகமாய்த் தடித்த சொண்டும் பரந்தமூக்கும் உள்ளோராகின்றார்கள். மத்தியதரையாரின் ஆதிச்சாயலோடு பொருந்தாத இந்த விகற்பங்களெல்லாவற்றிற்கும் காரணம் என்னவெனில், திராவிடர் இந்தியாவினுள் நுழைந்தபோது, அங்கு முன்னரே குடியேறி உறைந்திருந்த கறுத்த, தடித்த உதடு படைத்த பழங்குடிகளோடு அன்னோர் கலந்துகொண்டதேயாம் என்று எனக்குத் தோன்றிற்று. திராவிடருக்கு முற்பட்ட குலங்கள் இன்றைக்கும் காடுகளில் மிகுந்திருக்கின்றன" என்கின்றார்.[2]

---

[1] Note by Professor Fleure in "Dravidian Element in Indian Culture" by Gilbert Slater. p. p. 35—36.

[2] Dravidian Element in Indian Culture. p. p. 19—20.

மிகக் கரியநிறமக்கள்:— பாதகண்டத்தில் தமிழர் வந்திறங்குமுன் அங்குச்சென்று குடியேறியிருந்த குலங்கள் எவ்வாறுனவை என நிச்சயித்தல் இயலும் கருமமன்று. மத்தியதரைக்குலத்தைச் சேர்ந்தவர்களே ஆதியில் வந்து, புரோபஸர் புளூர் சொல்லியபடி, வெவ்வேறு பாகங்களில் வசித்தமையால் உடற்கூற்றில் வேற்றுமையடைந்தவர்களுமாகலாம். வேறு குலங்கள் முந்திவந்திருந்தன என்று முடிப்பினும், அவைகளும் ஒரு பொது இடத்தினின்று பிரிந்துவந்தனவே ஆதல்வேண்டும். எபிரேயருடைய பழைய நூலாகிய விவிலியம் கூறுகின்ற நோவாவின் சலப்பிரளயம் மக்கள் ஆதியிற் குழுமியிருந்த நாடுகளிலேதான் நடந்தது என்பதும், அப்பிரளயத்தின்முன் அந்நாடுகளிலிருந்து சிதறுண்டுபோயிருந்தோர் நெடுங்காலம் வெவ்வேறு தட்பவெப்ப நிலையுள்ள தூரநாடுகளில் வசித்து உருவத்தில் நிறத்தில் விகற்பம் அடைந்துகொண்டு வெவ்வேறு பண்டைக்குலங்களாயிருந்தனர் என்பதும் சில்லோர்கொள்கை. இவ்வாறே வெகு சீதளப்பிரதேசங்களை அண்டிய வட ஐரோப்பியர் (வடதுருவக்காடிகளும் வெண்மையடைந்தவாறுய்) வெண்ணிறத்தவராயினர் என்பதும், வெகு உஷ்ணப்பிரதேசமாகிய தென் ஆபிரிக்காவை அடைந்தோர் மிகக் கரியநிறங்கொண்ட காப்பிரிகள் ஆயினர் என்பதும், தேசசுவாத்தியத்தின் தன்மைகொண்டுதான் மங்கோலியர்[1] மஞ்சள்வர்ணம் அடைந்தார் என்பதும் அறிஞர்களது அபிமதமாம்.

மிகக் கரியநிறமும் மிக வெளுத்தவர்ணமும் பிற்பட்டே எழுந்தன என்பதும், மனுடர் ஆரம்பத்தில் பொதுநிறக்கருமையுள்ளோரே என்பதும் அறிஞர் சிலரது கொள்கை. புரோபஸர் ஸேய்ஸ் என்பவர் கூறுவது யாதெனில்: "கறுத்தகுலங்களின் கருநிறம்

---

[1] MONG-KU is said to mean silver, possibly it is connected with the Tamil MANGAL, (colour of gold),

அடித்தோலுக்குக் கீழே பரப்பியிருக்கும் நிறப்பசையினால் உண்டாவது. உள்ளபடி காப்பிரிக்கோ அது தசைநார்களிலும் மூளையிலும் காணப்படும். இப்பசை, பொதுவாய், சுவாசப்பையிலிருந்து தள்ளிவிடப்படும் இருந்தை மலினத்தால் உண்டாகி, மயிர்த் துவாரங்களினின்று தோலிலும் சவ்விலும் வந்து படிவது. ஆகவே சுவாசப்பை குறைவாய் வேலைசெய்வதினால் நிறப்பசை அதிகப் படுவதாகும். மயிர்த் துவாரங்களைச் சுணக்கச்செய்வதெதுவோ அதுவும் நிறப்பசையைக்கூட்டிவிடும். இதன் நிமித்தமே அதிக வெயில்படுவதினால் தோலானது கன்றியநிறம் பெறுகின்றது. ஆயினும் கன்றியநிறம் நிலையானதல்ல. அது வேறு, இத்தாலியர் இஸ்பானியருடைய பொதுநிறக் கருமை வேறு, இன்னும் அதிகமாய், மலாயர் பொலினேசியரின் கருஞ்சிவப்புநிறமும் வேறு.

"ஆதிமனுஷனின் நிறம் கருமையடைந்திருந்ததே எனத் தோன்றும். கருநிறப்பசை இடையில் அற்றுப்போவதற்கு நியாயஞ்சொல்லலாம்; முன்னில்லாத இடத்தில் அது எப்படி வந்தது என்று காட்டுவதோ எளிதல்ல. துருவங்களின் குளிருக்குள்ளே மிருகங்கள் 'நிலையான பாண்டுபிடித்த நிறம்' என்று சொல்லப்படுகிற வெண்மையை அடையும் சார்புகொள்ளுகின்றன. கரடியும் முயலும் தங்களைச்சூழ்ந்துள்ள மூடுபனியின் நிறத்தைப் பொருந்துகின்றன.

"வெள்ளைச்சாதியாருள் ஓர் பகுதியில் இன்றைக்கும் அவர்களது கரிய உற்பத்தியின் அடையாளங்களைக் காணலாம். கருநிறமுள்ளவர்களின் மேனியெல்லாம் சமனாய்ப்பரப்பியிருக்கிற நிறப்பசையானது தேமலுள்ள வெள்ளைச்சாதியாரில் தொட்டம் தொட்டமாய்க் காணப்படும். இத்தேமல் வெயிற்சூட்டால் வருவதென்பது பலருடைய கொள்கை. அது தவறு. வெயில் படுவதனால் மயிர்த்துவாரங்கள் சுணைகொண்டு தேமலை அதிகமாக்கும்

என்பது மெய்யேயானாலும், நிறப்பசை அங்கு ஏலவே இருப்ப தொன்று. வெயிலும் காற்றும் பிடியாதபடி எப்போதும் காக்கப் படும் தேகத்தின் பாகங்களிலும் தேமல் இருப்பதுண்டு என்றதும் ஒன்று. வடமேற்கு ஐரோப்பாவிலும் வடஆபிரிக்காவிலும் தேம லுள்ள கெல்ற்று-லீபியகுலம் தேமலற்ற சுத்த வெள்ளைத்தோ லுள்ள ஸ்காந்தி—சர்மனியகுலத்திலும் பார்க்கக் குறைவாய்ப் 'பாண்டு பிடித்த' தாயிற்று என்றதே உண்மை"[1]

இவ்வாறு பாண்டு பிடியாத கரியமக்களே மத்தியதரைக் கடலைச்சூழ்ந்த நாடுகளிலெல்லாம் இருந்தோராவர். அந்நாடுகளின் பழைய சாசனங்களில் இந்த நிறத்தவரைக் கருந்தலையரெனக் காட்டியிருக்கிறது என்ப. உலக சிருட்டியையும் சலப்பிரளயத் தையும் கூறுகின்ற சுமேரிய வரலாற்றிலே நிலமடந்தையும் நிலத் தெய்வமும் அனு எனும் வான்தெய்வத்தோடும் அங்கி எனும் நீர்த்தெய்வத்தோடும்கூடக் கருந்தலையுள்ள சனத்தை அதாவது சுமேரியருடைய முன்னோரைப் படைத்தனரெனச் சொல்லியிருக் கிறது. அக்கத்தியாவின் அரசனான சார்கொன் காலத்துக் கல் வெட்டுக்களும் அவ்வரசனை இஷடார் எனும் தேவி கருந்தலைச் சனத் தை ஆளுதற்குவைத்தாள் எனக் கூறுகின்றன. அம்முறபி அரசன் தனது பேர்போன நீதிச்சட்டத் தம்பத்தில் என்லில்தெய்வமே தனக்குக் கறுத்த சனங்களைக் குடிகளாகக்கொடுத்தது என வரை கின்றான். இசின் அரசபாரம்பரையினனும் கி. மு. 2200-ஆண்டு வரையில் செங்கோல்செலுத்தியவனுமான லிபேர் இஷடார் என்ப வன், தான் கறுத்தமயிருள்ள சனத்தைத் தாயாடு தன்புருவை களை நடப்பிப்பதுபோல நடப்பிப்பேன் என்று கூறுகிறான்.

எகிப்தியரைச் சுட்டிப்பேசில், புளூற்றக்கு எனும் நூலாசிரி யன் எழுதிவைத்த ஐதிகத்தின்படி, அவர்களுடைய மிகப்பழைய

[1] A. H. Sayce: The Races of the Old Testament," p. p. 37-38, 41—42.

தெய்வமாகிய ஓசிறிஸ் கருநிறமுள்ளது எனப்பட்டது. ஓசிறிசும் பின்வந்த ராதெய்வமும் ஒன்றேயென உண்மையாகச் சொல்லலாம். பண்டை எகிப்தியருடைய மானுட இயற்கைச்சாத்திரத்தில் வல்லவரென்று ஏத்தப்படுகின்ற புரோபசர் எலியெட் ஸ்மித் சொல்வது இது. "ஆதி எகிப்தியரின் மயிர் இக்கால ஐரோப்பிய அல்லது இபேரிய கபிலநிறச் சனங்களுடையதற்குச் சரியொத்ததாயிருந்தது. அது மிக இருண்ட அல்லது கரியநிறங்கொண்டு சுருள்வதாய்ப் பஞ்சுபோன்ற மென்மையுடையது" என்கின்றார்.

கிரேத்தாதீவின் மீனேவரும் அவ்வாறே கபிலநிறமுள்ளவர்களாய் இருந்தனரெனத் தோன்றுகிறது. உள்ளபடி கிரேத்தாவின் பழைய சித்திரங்களுளெல்லாம் ஆண்மக்களைக் கறுத்தவர்களாகத் தீட்டியிருக்கக் காணலாம். (பெண்களுக்கு வெள்ளைவர்ணம் இட்டிருப்பது,ஓவியர்கள் அவர்களது தோற்றத்தை அழகாக்க விரும்பியிருந்ததனாலே எனலாம்.) பிற்காலத்ததாகிய திரோனியபாத்திரம் ஒன்றில் அப்பொல்லோ எனும் ஆணுருவம் கறுப்பாயும் அர்த்தேமிஸ் எனும் பெண்ணுருவம் வெள்ளையாயும் எழுதியிருத்தல் கவனத்துக்குரியது. கிரீசில் எஞ்சியிருந்த மீனேவன்சனம் பிலிஸ்தியரே என்பது பலசான்றுகளாற் பெறப்படும். இனி, எகிப்திய ஞாபகச் சின்னங்களில் பிலிஸ்தியரின் நிறமும் கெத்தியர் செமித்தியரின் நிறமும் ஒன்றுதான். அதாவது செம்புபோன்ற கருமஞ்சள் அல்லது கபிலவர்ணம். ஆயின் பக்கப்பார்வையிலோ அவர்கள் நெற்றியும் மூக்கும் நேரியனவாயிருந்தமை ஐரோப்பிய அல்லது மத்தியதரைக்கடற்சனங்களை நினைவூட்டுகின்றது.

ஸ்பானியாவின் இபேரியரையும் இங்கிலாந்தின் தரூயிதரையும்பற்றி அன்னோர் நிறமுள்ள தோலும் சுருளுகின்ற மயிருமுள்ளவர்களாமென்று தசித்து எனும் உரோம ஆசிரியர் நமக்கு அறிவிக்கின்றார்.[1]

---

[1] Father Heras in New Review xiv. 188—91, where his authorities are fully marshalled.

ஆரியர் கி. மு. 1500 வரையில் இந்தியாவில் நுழைந்தபோது அங்குக் குடியேறியிருக்கக்கண்ட சனம் தமிழரே என்பதில் மயக்க மில்லை. சிந்துவெளி நாகரிகத்தைப்பற்றி நாம் விவரிக்கும்போது இது மிகவும் விகசிதமாகும். ஆரியர் இந்தியப் பழங்குடிகளைக் கரிய நிறத்தவர் (R, g. I, 130, 8; II, 20, 7; ix, 41, 1—2) என்று மட்டுமன்று, மூக்கில்லாதவர் எனவும் இகழ்ந்துகூறினர். தமிழர் பூர்வ இருப்பிடத்தினின்றுவந்து இந்தியாவிற் பல நூற்றாண்டுக ளாய்த் தங்கி, முன்வந்திருந்தோருடன் கலந்துகொண்டதனாலே அன்னோருக்கு இவ்விவரம் ஒருவகையிற் பொருந்துவதாயிற்று எனலாம்.

**தரைநூலின்சாட்சி:**—இந்தியா ஆபிரிக்கா முதலிய தக்கிண பாகங்களிலும், வட ஐரோப்பா ஆசியா முதலிய உத்தரபாகங்களி லும் மிகப்பழையகாலங்களிற் குடியேறிய மனுக்குலத்தாரெல்லாம் எங்கிருந்து பிரிந்துபோயிருப்பார்கள் என்பதற்குத் தரைநூலி லிருந்து ஒரு நல்ல சாட்சி வெளிப்படுகின்றது. ஆதிநாட்களில் பூமியின் வடபாகமெல்லாம் பனிக்கட்டியால் மூடுண்டிருந்ததென் பது அந்தநூல் காட்டுகின்ற ஒருசெய்தி. பனிக்கட்டிப்பாளங்கள் அருகியருகி வடதுருவத்தோடு ஒதுங்கியும் மலையுச்சிகளில்மட்டும் தங்கியும் நின்ற இடைக்காலத்தில், தெற்கே இன்று சகாரா இருக் கும்பக்கம் செழிப்பற்ற வனாந்தரமாயிற்று. அதனால் மக்கள் மெல்ல மெல்ல வடபாகத்தை நாடிப்போய் மேற்கிலும் கிழக்கிலும் உறை விடம் தேடுவோரானார்கள். ஐரோப்பாவும் ஆசியாவின் அதிகிழக் குச்சீமைகளும் இவ்வாறே குடியேற்றம் அடைந்தன. மத்திய தரைக் கடற்கரைகளின் மட்டான உட்டணத்தால் விலகி வடக்கே யுள்ள சீதளபாகங்களை அடைந்தோர் படிப்படியாய் வெள்ளையராகி விடத் தெற்கே சகாரா வனாந்தரத்தை அண்டிய பாகங்களைச் சேர்ந் தோர் மிகக்கறுத்த காப்பிரிகளானார்கள். வெள்ளையரும் கரியவரும் என்ற பெரும் பாகுபாடு இவ்வண்ணமே பூமியின் மாறுபட்ட சீதள உட்டணநிலையால் உண்டாயிற்று என்பர் தரைநூலோர்.

அப்பால், புதிய பூகோளப்பாதியெனும் அமெரிக்கா முதலான தேசங்கள் பழைய கோளப்பாதியின் அதிகிழக்குமூலையிலிருந்து குடியேற்றப்பட்டன எனத் தோன்றும்.

மனுக்குலத்தின் தொட்டிலென்று சொல்லத்தக்க ஆதியிருப்பிடத்தைக் குறிப்பாய்ச் சொல்லுதற்குப் போதிய ஏதுக்கள் இல்லை. ஆயினும், பல ஆராய்ச்சியாளர் அது யூபிரட்டீஸ்நதிக்கும் டைகிரிஸ்நதிக்கும் இடைப்பட்ட பிரதேசமாம் என ஊகிப்பர். விவிலியத்தின் தலைப்பாகமாகிய பஞ்சாகமங்களில் வரையப்பட்டிருக்கும் இடைக்கால வரலாறுகளை எகிப்தியரது சித்திர லிபிக்குறிப்புக்களோடும் அசீரியர் பபிலோனியருடைய ஆப்பெழுத்துச் சாசனங்களோடும் ஒப்புநோக்கிய இக்கால ஆராய்ச்சியாளர் அவை உண்மைச் சரித்திர சம்பவங்களே எனத் துணிவர். இச்சாசனங்கள் கூறுகின்ற சீரியர், கெத்தியர், பபிலோனியர், பிலிஸ்தியர், பினீசியர், எபிரேயர், அராபியர், எகிப்தியர் எல்லாம் அவ்வப்பிரதேசத்தின் ஆதிக்குடிகளாய்க் காணப்படுகின்றனர். அப்பால், மேற்கே கிரேத்தாவோடு சேர்ந்த கிரேக்கத்தீவுகளும், கிழக்கே இந்தியாவரையும் உள்ள பல தீவாந்தரங்களும் புலமாகின்றன. சீனமும் அப்பால் அமெரிக்க நாடுகளும் அக்காலம் அறியப்படாதனபோலும்.

இனி, ஒத்த ஐதிகங்கள் ஆதிய துறைகளை நாம் சித்த சமாதானத்தோடு ஆராயும்போது, மத்தியதரைக்கடலைச்சார்ந்த குலங்களும் நம் தமிழரும் ஓரிடத்திலிருந்து பிரிந்தவர்களே எனக் கரதலாமலகமாய்க் காண்போம்.

55526

## II. செந்தமிழ்ப்பிரசுரங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) ... ... | 0 | 4 | 0 |
| 2. | கனாநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| 3. | *வளையாபதிச்செய்யுட்கள் ... ... ... | | | |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 6. | *நேமிநாதம் (உரையுடன்) ... ... ... | | | |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ... | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... ... ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 11. | *விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம் ... ... | | | |
| 12. | *பன்னிருபாட்டியல் ... ... ... | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 15. | *திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | | | |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 20. | *நரிவிருத்தம் ... ... ... ... | | | |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22. | *திருக்கலம்பகம் (ஷை) ... ... | | | |
| 23. | *விக்கிரமசோழனுலா ... ... ... | | | |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை... ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை... ... ... | 0 | 8 | 0 |
| 28. | *சந்திராலோகம் ... ... ... | | | |
| 29. | *சோழவம்சசரித்திரச்சுருக்கம் ... ... | | | |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 31. | *பாண்டியம் ... ... ... ... | | | |
| 32. | மனீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 33. | *வேளிர்வரலாறு ... ... ... | | | |
| 34. | *அகப்பொருள்விளக்கம் ... ... ... | | | |
| 35. | *திருமந்திரநூறுபாட்டுக்குரை ... ... | | | |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | *பழமொழி மூலமும் பழையஉரையும் (முதல் 100 செய்) | | | |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |